விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 ஆவணி 29 முஹர 9 இதழ் 216

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (14—9—86)

## இலங்கை அரசின் இரகசியங்கள் அடங்கிய ராஜதந்திரப் பை மறைவு

கொழும்பு சனி

இலங்கை அரசின் மிக உயர்ந்த இரகசியங்கள் அடங்கிய ராஜதநதிரப் பை ஒன்று காணமல் போயுள் ளது.

மேற்கு ஐரோப்பிய நாட்டிலுள்ள இலங்கைத் தூது வராலயத்துக்கு விமானமூலம் அனுப்பிவைக்கப்பட்ட மேற்படிபையே காணமல் போயுள்ளதாகும்.

இவ்விடயம் குறித்து இலங்கை அரசினல் தீவிர தேடு தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறி யப்படுகிறது. [கூ-எ]

# முல்லைத்தீவு கடற்பகுதியில் மறைந்திருந்தபடையினருடன் போராளிகள் நேரடிமோதல்

(முல்லைத்தீவிலிருந்து நமது நிருபர்)

**முல்லைத்தீவு கடற்பிராந்தியத்தில் கடற்படையினருக்கும், போராளி களுக்குமிடையில் பலத்த நேரடி மோதல் சுமார் ஒருமணிநேரம் நேற்று இடம் பெற்றது.**

அநாதரவாகக் கிடக்கக் காணப்பட்ட வள்ளமொன்றைப் போராளிகள் மீட்டு வரும் பொருட்டு படகொன்றில் சென்றபோது, அநாதரவாகக் கிடக்கக் காணப்பட்ட மேற்படி வள்ளத்துக்குள் மறைந்திருந்த கடற்படையினர் போராளிகளை நோக்கித் தாக்குதல் மேற்கொள்ளத் தொடங்கினர்.

தொடர்ந்து இருபகுதியினருக்கும் இடையில் நேரடிச் சமர் ஒருமணி நேரம் இடம் பெற்றது இத்தாக்குதலில் கடற்படையினர் தரப்பில் சேதமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இச்சம்பவத்தையடுத்து பட

(11ம் பக்கம் பார்க்க)

## 'புலிகள்' தாக்குதலில் கவசவாகனம் சேதம்

(வல்வெட்டித்துறை நிருபர்)

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து கவச வாகனத்தில் முதலாம் குறுக்குத்தெரு வழியாக நேற்றுக்காலை வெளியே வர முயன்ற இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் ஆர். பி. ஜி. ரக துப்பாக்கிகள் கொண்டு தாக்குதல் நடாத்தியதில் கவசவாகனம் பலத்த சேதமடைந்தது. சில இராணுவத்தினர் காயமடைந் தனர்.

இதுவரை நடைபவனியாக வெளியே வர முயன்று தோல்வியடைந்த இராணுவத்தினர், நேற்று கவச

(12ம் பக்கம் பார்க்க)

## நான்கு கடற்படையினர்- இரண்டு போராளிகள் பலி

### தமிழீழ ராணுவம் அறிக்கை

யாழ்ப்பாணம் ஞாயிறு

முல்லைத்தீவு சிலாவத்தை கரையோரத்தில் கடற்படையினர் பொதுமக்கள்மீது தாக்குதல் மேற்கொண்டபோது தமிழீழ இராணுவத்தினர் எதிர்த்தாக்குதல் நடத்தியதில் நான்கு கடற்படையினர் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர். தமிழீழ ராணுவத்தினர் தரப்பில் இரு போராளிகள் மரணமடைந்தனர்.

தமிழீழ ராணுவம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள் ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

[-1ம்பக்கம் பார்க்க)

## தீவிரவாதத்தால் — தேசிய பொருளாதாரம் பாதிப்படைந்துள்ளது '—லலித்'

கொழும்பு, சனி

"தீவிரவாதம் நீடிப்பதால் தேசிய பொருளாதாரத்திற்கு பெரும் பாதிபபு ஏற்பட்டுள் ளது இந்த நாடு மற்றுமொரு சைபிரஸ்ாக மாறுவதை நாம் அனுமதிக்க முடியாது உலக அபிப்பிராயத்தை நாம் இலங்கை அரசுக்கு சாதகமாகத் திருப்பிக் கொள்ள வேண்டும்."

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலயத்தில் இன்று இடம் பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

தீவிரவாதத்தை இராணுவ ரீதியில் தான் அடக்க வேண்டும் என்று கூறுபவர்கள் யதார்த்த நிலையை உணராதவர்கள் என்று கூறிய அமைச்சர் அரசின் ஆலோசனைகளைக் கண்டிப்பவர்கள் அதற்கான மாற்று வழிகளையும் கூற வேண்டும் என்ருர். [எ]

## கடற்படையினருடன் 'மக்கள் விடுதலைப்படை' மோதல்

(ஊர்காவற்றுறை நிருபர்)

மக்கள் விடுதலைப் படைக்கும் கடற்படையினருக்குமிடையில் நேற்றுக்காலை பலத்த மோதல் ஏற்பட்டது. அரை மணித்தியாலமளவில் இம்மோதல் நீடித்தது

(11ம் பக்கம்பார்க்க)

உ

### திருமண அழைப்பு

மணமகன்: செல்வன் இ. வாமதேவன்

மணமகள்: செல்வி வ. தவமணி

இடம்: திருநெல்வேலி சிவன் கோவில்

காலம்: 15-9-86 (திங்கள்)

நேரம்: காலை 9-30 மணி முதல் 10-30 மணிவரை

தங்கள் நல்வரவை விரும்பும்

க. இராமசாமி குடும்பத்தினர் (வளலாய்)
திருமதி அ. வன்னியசிங்கம் (கைதடி)

31, சேர்.பொன். இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம். [C 4624]

## மட்டு - மஞ்சந்தொடுவாயில் படையினர் திடீர் முற்றுகை: நாற்பதுபேர் கைது

[மட்டக்களப்பு நிருபர்]

மட்டக்களப்பு படுவான் கரையில் அடிக்கடி குண்டுகள் வெடிக்கும் சத்தம் கேட்ட வண்ணமிருக்கும் அதேவேளை மட்டக்களப்பு நகர்புறத்தில் உள்ள மஞ்சந்தொடுவாயில் ஆயுதப்படையினர் திடீர் முற்றுகையிட்டு 40 பேரை கைது செய்துள்ளனர்

கடந்த 4 நாட்களுக்கு முன்னர் இரு ஹெலிகொப்டர்களிலும், பீரங்கிப் படகுகளிலும் படுவான்கரையை அடைந்த 300-க்கும் மேற்பட்ட ஆயுதப்படையினர் நாற்சந்தியில் முகாமிட்டிருப்பது தெரிந்ததே.

முகாமிட்டிருக்கும் ஆயுதப் படையினரை அங்கிருந்துவெளியேருதவாறு போராளிகள் சுற்றிவர முற்றுகையிட்டுதாக்குதல் நடத்தி வருகின்றனர்.

போராளிகளின் தாக்குதலைத் தொடர்ந்து ஆயுதப்படையினரும் ஷெல்களை ஏவிவிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆயுதப்படையினர் முகாமிட்டுள்ளநாள் தொடக்கம் இப்பகுதியில் ஒரே குண்டுகள் வெடிச்சத்தமும், துப்பாக்கிச்

(11ம் பக்கம் பார்க்க)

## பேராதனைப் பல்கலைக்கழக பொறியியலாளர் பீடம் மூடப்பட்டுள்ளது

கொழும்பு சனி

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்சழக துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

கடந்த சிலதினங்களுக்கு முன்னர் பல்கலைக்கழக அக்பர் விடுதியில் மாணவர்களுக்கிடையிலே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து பலர் பலத்த காயங்களுடன் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதையடுத்து பல்கலைக்கழகத்தில் நிலவிய பதற்றத்தால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பல்கலைக்கழக உபவேந்தர்மேலும் தெரிவித்துள்ளார்.

[11-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன அல்சேசன் மூன்றரை மாத ஆண் நாய்குட்டி விற்பனைக்கு உண்டு தொடர்பு நேரில். A. கனகரட்ணம், நியூ ரோட், ஆறுகால் மடம்.
[C 4594]

Christombu Farm, Shetna Farm சேவற்குஞ்சுகள் முறையே 14ந் திகதி, 16ந் திகதிகளில் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா பிறதர்ஸ். பிரம்படி, கொக்குவில்.
[C. 4576]

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான முகப்பு வளைவு அருகில் ''வல்மன்ஸ் சேல்ஸ் ஸ்டோல்'' இல் ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசெற்றுகள்- ''ஸ்ரீ துர்க்கா தேவியின் பெருமை'' இசைச் சொற்பொழிவு - வாரியார். ஸ்ரீ துர்க்காதேவிதுதி I, II III சுசீலா, வாணி, ராஜேஸ்வரி, ஜேசுதாஸ்; ஐயப்பன் பக்திப் பாடல்கள் ஜேசுதாஸ் இன்னும் பல. இவை யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் கிடைக்கும்.
[C-4626]

மல்லாகம் நீலியம்பனைச் சுற்றுடலில் கிணற்றுடன் இரண்டு வீடு கட்டக்கூடியதுமான 3¾ (மூன்றே முக்கால்) பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. இக்காணியுடன் சேர்க்கக்கூடிய மேலதிகக் காணியும் தேவையானால் ஒழுங்கு படுத்தித்தரப்படும். தொடர்பு: இ. குகேந்திரன், உப தபாற் கந்தோர், மல்லாகம்
(C-4608)

கொழும்புத்துறை ஆனந்தன் வடலி 3ம் ஒழுங்கை வீதி அருகாமையில் 2 பரப்புக் காணி புதிதாகமறுசீர் அமைக்கப்பட்ட உழவு இயந்திர இணைப்புப்பெட்டி ஒன்று விற்பனைக்குஉண்டு. தொடர்பு: 32/1, சீனி வாசகம் வீதி, கொட்டடி. (C-4602)

அவரி தராசு (இங்கிலிஸ் மார்க்) 1000கிலோ (20Cut) புதுப்பிக்கப்பட்டதும், 1986ம் ஆண்டுக்கு சீல்வைக்கப்பட்டதும். விபரங்களுக்கு: லிங்கம் சில்க் ஹவுஸ் 18 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(C-4598)

''பொமனேரியன்'' வெள்ளை நிறநாய்க் குட்டிகள் தடுப்பு ஊசி போடப்பட்டு, பூச்சி நீக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு. ஒரு வயது உடைய வெள்ளை நிறப் பொமனேரியன் ஆண் நாயும் விற்பனைக்கு உண்டு. த சிதம்பரநாதன். முன்னாள் நல்லூர் M P காரியாலயம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு
[C 4614]

மைசூர் அரிசி நம்பர்-1 கசிவில்லாதது, சுத்தமானது, தரமானது. சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும் தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

## விற்பனைக்கு

புதிய/பழைய குளிர்சாதனப் பெட்டிகள். நவீன தையல் மெஷின் (சிங்கர்) சோக்கேஸ், சுவர் மணிக்கூடுகள், Deep Freezer Beiling electric cooker, கெசற் றேடியோக்கள், சொப்பர் லேடீஸ் சைக்கிள், கறுப்பு வெள்ளை T. V. Kenwood, Chief Blender, மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு. S. பதமநாதன், திருநெல்வேலிவடக்கு (திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில்). [C 4581]

வெளிநாடு செல்லும் டாக்டர் ஒருவரின் பலவித வீட்டுத் தளபாடங்கள், தேக்கு அல்மாரிகள், Show case கண்ணாடி, மேசைகள், Ladies சைக்கிள், சாப்பாட்டுமேசைகள், ஹோல் செற்றிகள். Typewriter, Fan Glass Book self, கசற் றேடியோ, அயன், கிளாஸ் வகைகள், சிங்கர் தையல் மெஷின், கட்டில் மெத்தைகள், Vono Spring கட்டில்கள், குளிர்சாதனப்பெட்டி மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம் St. Charles பாடசாலையருகில். [C 4587]

தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தின் முன்பாக உள்ள எமது விளம்பர நிலையத்தில் இருந்து அண்ணா கோப்பி, மற்றும் அண்ணாவின் உற்பத்தி பொருள்களை வாங்குவதோடு இனாம் பொருள்களையும், பெறுமதி வாய்ந்த துர்க்கையம்மன் ஸ்ரிக்கரையும் இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.
(A-1270)

பின்வரும் பொருட்கள் உடனடியாக விற்பனைக்குள்ளன Westpoint deep freezer, KDK Ceiling fans, கடைக்குரிய ஷோ கேஸ்கள், சோடாப் போத்தல் ராக்கை, Cashier's Counter விபரங்கள் பெறத் தொடர்பு கொள்க. விளம்பரதாரர், M 61, மே/பா dyn ads 476, பிரதான வீதி, சுண்டுக்குளி [சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)
(A-1272)

வீட்டுத்தளபாடங்கள், கசற் டெக்செற். Sanyo speakers, Bread Toaster, தட்டச்சு யந்திரம் கிளாஸ் Show case, ஹோல் செற், சிங்கர் Zig Zag தையல் மெஷின், வயலின லேடிஸ் சைக்கிள், Stabilizer Vono spring twin b ds Foam மெத்தைகள், லிபிகிளாஸ் வகைகள், மற்றும் பல உடன்விற்பனைக்கு. 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். St Charles பாடசாலையருகில். (C-4619)

## தேவை

சித்த ஆயுர்வேத வைத்திய சாலையில் மருந்து தயாரிப்பு வேலைகட்கு பெண் பிள்ளைகள் தேவை. நற்சான்றிதழுடன் நேரில் தொடர்புகொள்ளவும்; மங்களபதி வைத்தியசாலை, 41/5 சங்கிலியன் வீதி (பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி), நல்லூர் C 4628

## தேவை

யாழ். மாவட்டத்தில் ஒரு சிறு வீடு அல்லது கடை வாடகைக்குத் தேவை. விளம்பர இல: C 4574, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(C 4574

அனுபவமுள்ள தச்சுவேலையாட்கள், மோட்டார் மெக்கானிக்ஸ், வெல்டர்ஸ், பெண் வரவேற்பாளர்கள், சமையல் ஆட்கள் கெதியில் பாஸ்போட்டுடன் நேரில் சந்திக்கவும். டாக்டர் த. விஸ்வநாதன், கீரிமலை வீதி, சண்டிலிப்பாய். [C 4596]

இறைச்சிக்கு கோழி தேவை கிலோ 35 ரூபாவிற்கு மேற்பட்ட பல விலைகளில் எவ்வகை இனமாயினும் பெற்றுக் கொள்ளப்படும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல, 23131
[C-4565]

சுண்டிக்குளி சைவமகா சபைக்கு பயிற்றப்பட்ட இரண்டு பாலர் பாடசாலை [Nursery] பெண் ஆசிரியர்கள் தேவை தகைமைகளைக் குறிப்பிட்டு கீழ்க்காணும் முகவரிக்கு 18 - 9 - 86 க்கு முன் விண்ணப்பிக்கவும் தலைவர், சுண்டிக்குளி சைவமகாசபை, 40 ஈச்சமோட்டைவீதி, யாழ்ப்பாணம். 11 - 9 - 86.
(C-4603)

பிரபலமான வியாபார நிறுவனத்துக்கு [Accounts clerk] கடைக்கணக்கு ஆங்கிலம், தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து அனுபவமுடைய பெண்லிகிதர் தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டும் 18-09-86 முன் அனுபவம் மற்றும் சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. C 4595, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 4595]

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு தங்குவதற்கு அமைதியான சூழலில் அறையொன்று தேவைப்படுகின்றது. யாழ் மாநகர எல்லைக்குள்ளோ அல்லது அதன் சமீபமாக உள்ள பகுதிகளிலோ இருக்குமாகில் தயவு செய்து தெரிவிக்கவும். பருத்தித்துறை வீதிக்குச் சமீபமாக இருத்தல் விரும்பத்தக்கது. விளம்பர இல. C 4621, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 4621]

## கல்வி

யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆண்டு ஏழுக்கு 1987 இல் அனுமதி கோர விண்ணப்ப முடிவு 22-09-1986 பிரவேசப் பரீட்சை .5-10-1986 இல் நடைபெறும். கடந்த ஆறுண்டுப் பரீட்சைகளின் 12 வினாத் தாள்களும், 31 தமிழ்க் கட்டுரைகளும் கொண்ட பரீட்சைத் துணைநூல் ரூபா 12-50 உங்கள் புத்தக வியாபாரியை அணுகுக. C 4627

**வியாபாரம் பெருக**

**விளம்பரம் செய்க**

## மணப்பந்தல்

யாழ். இந்து வேளாள கணக்காளர் மணமகன் (35 வயது) கடகலக்கினம் திருவாதிரை 8ல் செவ்வாய் அவருக்கு கனடா, அவுஸ்ரேலியா சென்றுள்ள அல்லது செல்ல இருக்கும் படித்த மணமகள் தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: பரதாஸ், 218/2, பலாலி வீதி, கந்தர்மடம்.
[C 4623]

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த செவ்வாய்க் குற்றமுள்ள டாக்டர் பெண்ணுக்கு அதே தகுதியுள்ள வெளியூர் டாக்டர் [M. B B S] 28க்கும் 32 வயதுக்கும் இடையிலுள்ள மணமகன் தேவை. சீதனம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும், விளம்பர இல. 45×4 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். [C 4584]

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த அரசாங்க சேவையிலுள்ள 42 வயதுள்ள சைவப் பெண்ணுக்கு சகோதரர் மணமகன் தேடுகின்றார் தயவு செய்து ஜாதக் குறிப்புடன் கூடிய முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும், விளம்பர இலக்கம் C 4632, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்
C 4632

## சேவை

வாட்டப்பம் மோட்டர், மின்விசிறி, கிறைண்டர் அடுப்பு, ரான்ஸ்போமர், வாசிங் மெஷின், ஸ்ராட்டர் றிப் சுபிச் ஆகியவை திருத்த, றீவைண்டிங் செய்ய- Omega, Manipay Road Jaffna. [ஈழநாட்டிற்கு எதிரில்] பழுதடைந்த உபகரணங்கள் விலைக்கும் வாங்குவோம்.
[C 4564]

வெளிநாட்டு, உள்நாட்டு குளிர்சாதனப்பெட்டிகள் அநுபவம் மிக்க தொழில்நுட்ப வல்லுநரால் சிறந்தமுறையில் திருத்திக் கொடுக்கப்படும். ஒருவருட உத்தரவாதமும் அளிக்கப்படும். பிறீமல்ரி சேவிஸ் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு [திருநெல்வேலிச் சந்திக்கும் யாழ். மருத்துவபீடத்திற்கும் இடையில்] [C4582]

## FOR SALE

Two Lachchams. Chemmani Road, Nallur near Education Dept First offer Rajoo, Excise, Kachcheri, Jaffna.
[C 4607]

## வாடகைக்கு

தொழில் புரியும் பெண்களுக்கும், கல்வி பயிலும் மாணவிகட்கும் உணவுடன் கூடிய விடுதி வசதி உண்டு மேலதிக விபரங்கட்கு Ladie's Academy, 59, Victoria, Road, Jaffna. T P.22365.
(C 4611)

## வகுப்புகள்

ஆங்கிலத் தட்டெழுத்து வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன பயில விரும்புவோர் 59, Victoria Road, Jaffna. T.P 22365 தொடர்பு கொள்க. [C 4612]

கரவெட்டி மொடேன் எடியுகேசன் சென்ரரில் க பொ. த [உயர்] 87-ம் ஆண்டு பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு கலை / வர்த்தக / விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. [C-4412]

ஆரம்பம் 16-9-86 A/L 87 பௌதிக சரித மீட்டல் ஆசிரியர் ரவீந்திரநாதன் Time Tue and Thurs 4-00 p.m 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [P M.C முன்பாக]
[C 4604]

6ம், 7ம், 8ம் வகுப்புகள் கணிதம் ஆங்கிலம் G C E. O' Lev கணிதம் G C E. 'A' Lev. Pure Maths App. Maths Physics 12 வருட கணித, தமிழ் ஆங்கில அனுபவமுள்ள பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும். வீடுகள் தோறும் சென்று கற்பிப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்படும், விபரங்களுக்கு விளம்பர இல C. 4609 C/o ஈழநாடு என்னும் முகவரிக்கு உடனே விண்ணப்பிக்கவும்.
(C 4609)

உ

## திருமண அழைப்பு

*************************

மணமகன்: செல்வன் **மா. சோமசேகரம்**
(ஆசிரியர், மாதகல் செ. யோ. ம. வி.)

மணமகள்: செல்வி **அ. வசந்தமாலா**

காலம்: 15 09-1986. (ஆவணி 30-ம் திகதி)
திங்கள் காலை 9-13 முதல் 10-31 வரை.

இடம்: சுதுமலை சிவன் கோயில்
(மதிய போசனம் மணமகளின் சகோதரன் அ. பாரதியின் சுதுமலை இல்லத்தில் நடைபெறும்)

வரவேற்பு: மணமகன் இல்லத்தில் அன்று பிற்பகல் 4 00 மணி முதல் 7 00 மணி வரை வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு திருமதி
அ. மு. மாரிமுத்து,
அராலி தெற்கு,
அராலி

திரு. திருமதி
ச. கி. அம்பலவாணர்,
[ஈழநாடு]
622, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(A-1274)

# தேரில் எழுந்தருளும் தேவி அருள் பெற்றுய்வோம்

ஆகம விதிகளுக்கமைய அமைக்கப்பட்ட ஆலயங்களில் ரதோற்சவம் முக்கியதிருவிழா வாக இடம்பெறுகிறது அரசமாளிகையைக் குறிக்கும் கோயில் என்னும் தமிழ் சொல்லும் ''பிராசாதய'' (கோயில்) என்னும் வடமொழிச்சொல்லும் அரசனுக்கும் கோவிலுக்கும் உள்ள தொடர்பைக் காட்டுவது போல ரதோற்சவமும் அதனை வலியுறுத்திக்காட்டுகிறது.

மனிதநாகரீக வரலாற்றில் ''ரதம்'' பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்பட்டது. மன்னர், பிரபுக்கள் செல்வந்தர்களுக்கு ஊர்தியாகவும், போர்ப்படைகளில் ஒன்றாகவும் தெய்வங்களின் ஊர்தியாகவும் சமயதத்துவக் கருத்துக்கள் பொதிந்துள்ள கலைச்செல்வமாகவும் அரும்பொருட்காட்சிப்பொருளாகவும் திருவருட்சின்னமாகவும் அடியவர்களது உள்ளத்தினைத் தன்பால் ஈர்க்கும் ரதம் சிறப்புப் பெற்றுள்ளது.

ஆன்மாக்களைப் பிடித்துள்ள மும்மலங்களையும் அழிப்பதற்காக இறைவன் ரதத்தில் ஏறி வருகிறான். ரதத்தின் அமைப்பைப் பொறுத்தளவில் கீழே ஏழு உலகங்களைக்குறிப்பதாக கீழ் ஏழு அடுக்குகளையும், மேலே ஏழு உலகங்களைக் குறிப்பதாக மேல் ஏழு அடுக்குகளையும் கொண்டதாகவும் இறைவன் எழுந்தருள்வதற்காக மரத்தில் வெள்ளி, தங்கத்திலான சிம்மாசனமும் தமிழர்களின்பண்பட்டகலைக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கும்.

**மு. வாமதேவன்**

ஈழநாட்டில் சரித்திரப் புகழ் பெற்ற எத்தனையோ ஆலயங்களில் சித்திரத்தேர்கள் அமைக்கப்பட்டுள்ள போதும் தெல்லிப்பழை ''துர்க்காபுரத்தில்''கோயில் கொண்டெழுந்தருளி உள்ள ஸ்ரீ துர்க்கா தேவியின் ரதம் புதுமோடியிலான ''முக பத்திர வேலைப்பாடு''களுடன் அமைக்கப்பட்ட முதலாவது ரதமாகும்.

ஆதி சக்தியான ஸ்ரீ துர்க்கா தேவி அக்கினி போன்ற நிறத்துடனும் 18 கைகளுடனும் வீற்றிருக்க ஏனைய எட்டுத் துர்க்கைகளும் தாமரை மலர் வடிவிலமைந்த ரதங்களில் எட்டுத்திக்குகளிலும் இருந்து அருள் பாலிக்கின்றனர். எட்டுக் கோணங்களுக்கும் எட்டுச் சிங்கங்களை அமைத்து ஆகாயத்தைக்குறிக்கும் சிங்காசனத்தை அமைத்து அச்சிங்காசனத்தில் ஆதிசக்தியான துர்க்காதேவி வீற்றிருந்து பக்தர்களுக்குத் திருவருள் பாலிக்கின்றாள்.

அடியார்களின் துன்பத்தைக்களைந்து திருவருளை வழங்கி பாதுகாக்கும் தன்மை

[10ம் பக்கம் பார்க்க]


## சுந்தர்ஸன்

நவீன மின்சார உபகரணங்கள்,
மகாராஜாவின் எஸ்–லோன் பைப்புகள்,
உபகரணங்கள்,
மின்சார நீர் இறைக்கும் இயந்திரங்கள்,
நவீன மின் தூங்கு லாம்புகள், சுவர் லாம்புகள், மின் அடுப்புகள், மின் விசிறிகள்
ஆகியவற்றை
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் வியாபாரிகட்கு விசேட கழிவு வழங்கப்படும்.

வடமாகாணத்தில் மின்சார உபகரணங்கள் இறக்குமதி செய்து மிகவும் சகாயவிலையில் விற்கும் ஒரே ஸ்தாபனம்

## சுந்தர்ஸன்

மத்திய சந்தை, மானிப்பாய்.

முக்கிய குறிப்பு!
எமக்கு வேறு எங்கும் கிளை ஸ்தாபனம் இல்லை என்பதை வாடிக்கையாளர்கட்கும், பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

C 4510



## ACCOUNTS TRAINEES

பின்வரும் தகைமையுடையோர் விண்ணப்பிக்கவும்:-

* G. C. E. (Adv. Level)
* ஆங்கிலத்தில் விசேட சித்தி
* ஆங்கில தட்டெழுத்து அறிவு

விண்ணப்ப கடைசித் திகதி 23-09-86

TAXMAN,
Kannathiddy Junction,
JAFFNA.

(A-1267)



ஓம் சக்தி

ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம்

## திருமகளானாய் கலைமகளானாய் மலைமகளானாய் துர்க்கையே

தெல்லிப்பழை துர்க்காதேவி தேர்த் திருவிழாவில் மில்க்வைற் விளம்பர வாகனத்தில் ரூபா 15/-ற்கு மில்க்வைற் தயாரிப்புக்களை வாங்கும் அன்பர்களுக்கு ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம், சரஸ்வதி தேவியின் அழகிய ஸ்ரிக்கர் ஒன்றும், பொலித்தீன் பாக்கும், அறிவு நூல்களும் அன்பளிப்பாக வழங்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

# மில்க்வைற்

யாழ்ப்பாணம்.



## துர்க்கை அம்பாள் சித்திரத்தேர் திருவிழா

அடியவர்கள் அனைவருக்கும் அன்னை அருள்பாலிக்கட்டும்

# INTERNATIONAL COMMUNICATION COMPLEX

282 A, JAFFNA ROAD, MANIPAY.




தமிழ் ஈழத்தில், தலைநகருக்கு வெளியில் மானிப்பாயில் பாதுகாப்பான சூழலில் அமைந்திருக்கிறது.

சர்வதேச தொலைத்தொடர்பு நிலையம்

★ நொடிப்பொழுதில் ரெலெக்ஸ் சேவை ★

உள்நாட்டு — வெளிநாட்டு தொலைபேசி TELEPHONE — TELEX

★ தொலைத்தொடர்பு ★ இரவு — பகல் 24 மணி நேரமும் தொடர்ச்சியாக சேவையாற்றுகிறது
★ தன்னியக்க மின்பொறிக்கருவிகள் பொருத்தப்பட்ட ஒரே நிறுவனம் மட்டுமல்ல கைதேர்ந்த தொலைத்தொடர்பு ஊழியர்களின் சேவையும் வழங்கப்படுகிறது.

★ குளிரூட்டப்பட்ட அறைகளில் இதமான தொலைத்தொடர்பு சேவை ★

★ வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ளும்போது இலங்கை நாணயத்தை வீணாக்காமல் வெளிநாட்டு நாணயத்தில் கட்டணம் செலவு செய்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான ஒழுங்குகளை நேரில் செய்துகொள்ளலாம். ★ உங்களுக்கு சேவை செய்வதே எமது குறிக்கோள்.

இரவு — பகல் சேவைக்கு காத்திருக்கின்றோம்.

## இன்ரநாஷனல் கொமினிகேஷன் கொம்பிளெக்ஸ்

282 A, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.

குறிப்பு:- ரெலிபோன், ரெலெக்ஸ் செய்திகள் உடனுக்கு உடன் உரியவர்களின் வீட்டிற்கு அறிவிக்கப்படும்.

(A 1096)

உ
சிவமயம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான அக்ஷய வருடம் ஆவணி மாதம் 30-ம் நாள் [15-09-86] திங்கட்கிழமை பகல் 12-03 மணிமுதல் 1-33 மணிவரை வரும் தனுலக்கின சுபமுகூர்த்தவேளையில்

எமது ஏக புத்திரன்

## ✶ சிரஞ்சீவி மகேந்திரனுக்கு ✶

பிரும்மோபதேசஞ் செய்து உபநயஞ்செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று மேற்படி முகூர்த்தம் பன்னாலை - வரத்தலம் ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசமேதராய் வருகைதந்து வைபவத்தைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்

பன்னாலை,
தெல்லிப்பழை.

இங்ஙனம்,
தங்கள் நல்வரவை விரும்பும்,
கு. மகேஸ்வரசர்மா தம்பதிகள்.

(C4615]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை மேற்கு, முருகேசு மகள் திலகவதனி
— வழக்காளி.

இல. ஈடு / 6351

எதிராக

சங்கானை கிழக்கு. 1. வல்லிபுரம் நாகராசாவும்
2. பெண் வசந்தாதேவியும்
— எதிராளிகள்.

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் 6351 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1986 ஆம் ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 19 ஆம் திகதி (19-09-86) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 6080/-ம், இதில் ரூபாய் 4000/-க்கு 27-9-85 திகதி தொடக்கம் 18-12-85 திகதிவரைக்கும் 100க்கு 48 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 3564-70 சதம். இதில் கோட்டுச் செலவில் ரூபா 450/- இறுபட்டது.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை கிழக்கிறை ''அளவெட்டியான் தோட்டமும், ஐமராயன்வளவும்'' நிலப்பரப்பு இரண்டு (2ம்) குளி 5 . 4ம் வான்பயிர் செய்பயிர்களும் வீடும், கிணறும். இதற்கு எல்லை கிழக்கு பாரதி ஒழுங்கை. வடக்கு நாகலிங்கம் திசவீரசிங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு கணபதி கந்தையாவின் ஆதனம். தெற்கு புதிதாக விடப்பட்ட இக்காணிக்குப் பாவிப்புக்கு உரிய ஒழுங்கை. இதடங்கலும். ஆனால் குறித்த கிணற்றில் மறுகாணிகளுக்குமுரிய தண்ணீர்ப்பங்கும் தூர்வை வழி வாய்க்கால் பாவிப்புரித்து புறநீங்கலாகவும்.
முற்பதிவு E 579 / 121.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.

தெல்லிப்பழை.
30-6-1986.
(C 4572)

'அருள்பாலிக்கும் துர்க்கா தேவியே

அருள் தா தாயே'

|
V

## சுதன் ஸ்ரோர்ஸ்

துர்க்காபுரம், தெல்லிப்பழை.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் நல்லதம்பி இராசலிங்கம்

தோற்றம்: 25-3-1937
மறைவு: 15-8-1986

பாசத்துடனும், பண்புடனும் எம்மை நேசித்த உடல் மறைந்து விட்டது; உயிர் எம்மை விட்டு அகலாது. தங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம். அன்னாரின் இறுதிச் சடங்கு அந்தியேட்டி, சாபிண்டீகரணம் ஆகியவற்றில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
உறவினர்.

62, பழம் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(C 4613)

## இவ்வாரம் எப்படி?

### இன்று

மாதம்: ஆவணி
திகதி: 29 (1986-09-14)
கிழமை: ஞாயிறு
திதி: ஏகாதசி
பி.ப. வரை
நக்ஷத்திரம்: உத்தராடம்
மு.ப. வரை

### மேடம்

பகைத்தவர்களே உங்களைப் பாராட்டச் செய்வார்கள்; குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். பொதுசன மதிப்புக் கிடைக்கும். குருவின் உபதேசமும் நன்மைக்கு வழிகாட்டும். முன்னேற்றமான சம்பவங்களுக்கு வித்திடப்படும்.

### இடபம்

பிள்ளைகளாலும் மகிழ்ச்சியுண்டு. அரசியல் வாதிகள் போற்றப்படுவர். நீர்த் தொழில் விருத்தியுமுண்டு. நினைத்ததில் வெற்றியுமுண்டு. புதிய முயற்சிகள் கைகூடும்.

### மிதுனம்

பொருளாதார நெருக்கடி தோன்றும். பணமும் பறி
[11-ம் பக்கம் பார்க்க]

## ஈராண்டு நினைவஞ்சலி

### இராமலிங்கம் நாகம்மா

(சனாதன ரிஷி விஸ்வ கோத்திரத் தலைவி)
புங்குடுதீவு 4 ம் வட்டாரம் மேற்கு
மண்ணுலகு: 1917-02-15
விண்ணுலகு: 1984-08-22
திதி: 1986-9-14

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து எங்களை பாசமுடனும் நேசமுடனும் காத்து ஈசனடி சேர்ந்து விட்ட எம் அன்புத் தெய்வமே: உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கிறோம்.

தங்கள் பிரிவால் வாடும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்.
'கலாபவனம்''
புங்குடுதீவு -4
(C 4606)

## 6-ம் மாத நினைவஞ்சலி



### செல்வி சேனாதிராசா பிரேமதரா

பிறப்பு: 10-2-66
அரக்கர் அழிப்பு: 21-3-86

எம் இதயக் கனியாகி
அன்பின் பிரேமா என
ஆசையாய் அழைத்திட்ட
அன்பு மகளே நீ
மங்கல மங்கை ஆகி
மங்கல நாண் பூட்ட
மணவறையில் பார்த்திருக்க
மகளே நாம் எண்ணினோம்
நீயோ ஷெல் அடித்து
நீள் பயணம் ஆனாய்
நினைவுகள் ஓராயிரம்
நெஞ்சில்விதைத்திட்டாய்
காலமெல்லாம் உன் நினைவாய்
கண்ணீரில் வாழ்கின்றோம்
உள்ளம் துடிக்குதம்மா
பெத்தமனம் வேகுதம்மா
பற்றுஅறுக்க விளையுதம்மா
எம்மை ஒறுத்து எத்தனையோ
உனக்குச் செய்ய எண்ணினோம்
எம்கணக்கு பிழையென்று
ஆண்டவன் தன்கணக்கை
எம்மவர்க்கும் காட்டிவிட்டான்
எவர்வாழ்வும்சதமென்று.
அக்காவும் அண்ணாவும்
ஓரோ குமுறுகின்றார்கள்
ஆதரவு யார் சொல்ல
உன் நினைவு வருகையிலே
உற்றாரும் ஊராரும்
கண்ணீர் மழை சொரிய
கலங்கித் தவிக்கின்றார்
இவ்வுலகில எம் உயிர்
உள்ள வரை இனிமேலும்
எமக்கு மகிழ்ச்சியில்லை
உன்னிடம் வரும் வரைக்கும்
ஆண்டவனிடம் உம் ஆத்மா
சாந்தியடைய வேண்டுமென
தினமும் பிரார்த்திக்கிறோம்.

உம் நினைவால் வாடும்
அப்பா, அம்மா, அம்மம்மா, அக்கா, அண்ணா,
உற்றார், உறவினர்கள்.
வைரவர்கோவில் லேன்,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.
(C 4505)

## தேவை

அராலி கரைப்பிட்டி விநாயகர் தேவஸ்தானத்திற்கு நித்திய, நைமித்திய கிரியைகளை ஆற்றக் குருக்கள் தேவை. மாதாந்த சம்பளம் ரூபா 900/- பிறவருவாய்களுடன் வீட்டு வசதியுமுண்டு. அநுபவ சான்றுகளுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: அறங்காவலர் சார்பில், திரு. க. சுப்பிரமணியம், அராலி தெற்கு, அராலி.

— அறங்காவலர்.

[C4573]

மிது வீடியோ மூவீசாரின்
இன்றைய புதிய வெளியீடு
★ S V. சேகர், சுலக்ஷனா, ★
★ S. S. சந்திரன், செந்தில் ★
நடித்த
ஜிகு ஜிகு ரயில்
[தரமான பிரதி]
மிது வீடியோ மூவீஸ்,
பிரதான வீதி, சித்தன்கேணி.
[A 1273]

# VACANCY

## JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE VADDUKODDAI

### Instructors

I. AUTOMOBILE TECHNOLOGY
II. FOUNDRY TECHNOLOGY

Candidates should have a recognised Diploma or Equivalent and minimum two years teaching experience.

III. CARPENTRY TRADE
IV. MASONRY TRADE

Candidates should have recognised practical experience in teaching above trade at Class I skill level.

Salary: About 1,000/- — 1,250/- all inclusive per month, negotiable.

Apply with full bio-data and two referees before 19th September, 86.

DIRECTOR

[A-1271]

# அறிவும் அனுபவமும்

# வீரமணிஐயர் பதில்கள்

**கேள்வி:**

ஆண்டவன் உங்களுக்கு அளித்த கொடையான இசைக் கலையை யார்யாரிடம் கற்றுக் கொண்டீர்கள்?

**பதில்:**

நான் சென்னையில் படித்துக் கொண்டு இருக்கும்போதே மாயூரம் விஸ்வநாதசாஸ்திரி, பாபநாசப்சிவன், சுத்தானந்தபாரதி போன்ருேரிடம் தமிழ் சாஹித்திய உருப்படிகளின் அமைப்பு முறையையும் இலக்கணங்களையும் அறிந்துகொண்டேன். முத்துஸ்வாமி தீட்சிதர் சியாமா சாஸ்திரிகள் தியாகராஜஸ்வாமிகள் போன்ற சாஹித்தியக் கர்த்தாக்களிடம் சாஹித்திய அமைப்பு முறைகளையும், ராக பாவம், சாஹித்திய பாவம் போன்ற நுணுக்கங்களையும் பயின்றேன். பாட்டுக்கு இசை மேதை எம். டி. இராமநாதனும், நாட்டியத்துக்கு ஸ்ரீமதி ருக்மணிதேவியும், சாஹித்தியத்திற்கு, ஸ்ரீ பாபநாசப்சிவனும் எனக்குக் குருவாக இருந்தார்கள். இருக்கின்ருர்கள்.

**கேள்வி:**

கீர்த்தனங்கள் இயற்றுவதில் வல்லவர் என்று பலரும் உங்களைப் புகழ்வதைக் கேட்டிருக்கிறேன். உங்களால் இயற்றப்பட்ட கீர்த்தனங்களைக் கூற முடியுமா?

**பதில்:**

நான் பல கீர்த்தனங்களை இயற்றி உள்ளேன். 1956-இல் சென்னை கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் சந்நிதியில் பிறந்த பாடல்தான் ''கற்பகவல்லி.'' இப்பாடல் தமிழகத்தின் பிரபல பாடகர் திரு. ரி. எம். சௌந்தரராசன் பாட இசைத் தட்டாக வெளிவந்தது.

சீர்காழி கோவிந்தராஜன் பாடிய ''உன்னை நான் காண்பதெங்கே முருகா'' என்ற பாடலே எனது முதலாவது பாடலாகும். இதுவும் இசைத் தட்டாக வெளிவந்தது. இவற்றைவிட ரி. எம். சௌந்தரராசன் பாடிய ''சரவண பவ குக சண்முகனே'' என்னும் எனது பாடலும் சீர்காழி கோவிந்தராஜன் பாடிய ''சிவ கங்கைக் கரையினிலே'' என்னும் எனது பாடலும் இசைத் தட்டாக வெளிவந்துள்ளன. அத்துடன் மகாராஜபுரம் சந்தானம் பாடியுள்ள ''சாரங்கன் மருமகனே'' என்ற எனது பதினறு ராகமாலிகைப் பாடல் இசைத்தட்டாக வெளிவந்துள்ளது. இவை யாவும் சங்கீதவித்துவான்களிடம் அபார வரவேற்பைப் பெற்று விட்டன.

**கற்பகவல்லியின் பொற்பதங்கள் பாடிய அற்புதக் கலைஞர்**

**கேள்வி:**

நீங்கள் ஆக்கிய நாட்டிய நாடகங்கள் பற்றிக் கூறமுடியுமா? அவற்றில் உங்களுக்குப் புகழைத் தேடிக்கொடுத்த நாட்டிய நாடகம் எது?

**பதில்:**

நான் பல நாட்டிய நாடகங்களை ஆக்கியுள்ளேன். எல்லாமே எனக்குப் புகழைத் தேடிக்கொடுத்தவை தான். ''மயிலைக் குறவஞ்சி'' ''தசாவதாரம்'' ''பரதம் பிறந்த கதை'' ஆகியன குறிப்பிடத்தக்கன. ''பரதம் பிறந்த கதை'' என்னும்நாட்டிய நாடகம், அடையறு கலாஷேத்திரத் தயாரிப்பில் சினிமாவில் விபரணச் சித்திரமாக வெளிவரவுள்ளது.

**கேள்வி:**

இசைத்துறையில் நீங்கள் புரிந்துள்ள சாதனைகள் என்ன?

**பதில்:**


என்னைப் பொறுத்தவரையில் இசைத்துறையில் ''நான் ஒருசாதனைமனிதன்'' என்னும் நாமத்தைச் சூட்டிக்கொள்ளத் தயாராக இல்லை. ''திருமயிலைக் கற்பகாம்பாள் கீர்த்தனைகள்'' எழுபத்திரண்டுமேள கர்த்ததாராகங்களில் சென்னையில் நூல்வடிவில் வெளிவந்துள்ளது. இந்நூலுக்குப் பிரபல வீணை வித்துவான் எஸ். பாலச்சந்தர், டாக்டர் பாலமுரளி கிருஷ்ணு ஆகியோர் அணிந்துரை வளங்கியுள்ளனர். ஆனல் இதுவரை யாருமே சங்கீதத்துறையில் சாதித்திருக்காத சாதனையாக 35 தாள உருப்படிகள், 175 தாள உருப்படிகள், 108 தாள உருப்படிகள் ஆகிய எனது கையெழுத்துப் பிரதிகள் அச்சேறத் தயாராக உள்ளன என்பது மட்டும் உண்மை.

**கேள்வி:**

இசைத்துறையில் உங்களுக்குக் கிடைத்த கௌரவங்கள் பற்றிக் கூறமுடியுமா?

**பதில்:**

1963-இல் இலங்கை தியாக ராஜ கான சமாஜம் இந்தியத் தூதுவர் மூலம் ''இயல் இசை வாரிதி'' என்னும் கௌரவத்தையும் நல்லை ஆதீனம் ''சாஹித்திய சிரோமணி'' என்னும் கௌரவத்தையும். மானிப்பாய் இந்துக்கல்லூரி அதன் பவளவிழாவில் ''முத்தமிழ் வித்தகன்'' என்னும் கௌரவத்தையும், புளியங்கூடல் மகாமாரி அம்பாள் தேவஸ்தானம் 'ஸாஹித்திய லகரி' என்னும் கௌரவத்தையும், கோப்பாய் அரசினர்



ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ''ஸாஹித்திய ஸாகரம்'' என்னும் கௌரவத்தையும் வழங்கியுள்ளன.

**கேள்வி:**

உங்கள் இசை உலக வாழ்வில் மறக்க முடியயாத சம்பவங்கள் பற்றிக் கூறுவீர்களா?

**பதில்:**

மறக்கமுடியாத சம்பவங்கள் ஏராளம் உண்டு. 1956-ம் ஆண்டு மார்கழி மாதம் முதலாம் திகதியை என்ஞல் மறக்கவே முடியாது. எனது முதலாவது நாட்டிய நாடகமான ''மயிலைக்குறவஞ்சி'' என்னும் நாட்டிய நாடக நூல் அரங்கேற்றம் என் வாழ்வின் பொன்னுன நாள். சென்னை மயிலாப்பூர் தேவஸ்தானம் இந்நூலை கொத்தமங்கலம் சுப்பு மூலம் வெளியீடு செய்தது இவ்விழாவில் திருப்புகழ்மணி ரி. எம். கிருஷ்ணசாமி ஐயர், இ. கிருஷ்ணையர், வழுவூர் இராமையா, பிள்ளை, பாபநாசம் சிவன், ஜி. என். பாலசுப்பிரமணிய ஐயர், ரி. எம். சௌந்தரராசன், முடிகொண்டான் வெங்கட் ராமையர், முசிறி சுப்பிரமணிய ஐயர், இராமையர் போன்றவர்கள் வாழ்த்துரை வழங்கி ''மதுர கவி'' என்னும் நிலையான கௌரவத்தை வழங்கி, பொன்னடை போர்த்தி, பொற்கிழியும் வழங்கினர். இந்நிகழ்ச்சியை என் வாழ்வில் மறக்க முடியுமா?

1956ல் சென்னை அடையாறு கலாஷேத்திரத்தில் ஸ்ரீமதி ருக்மணிதேவி 'ஆசுகவி' என்னும் பட்டத்தை வழங்கியதை மறக்கமுடியுமா? அத்துடன், நான் கற்ற பரதக் கலையை ஈழத்தில் ஒரே ஒரு மாணவிக்கு மட்டும்தான் கற்றுக் கொடுத்துள்ளேன். அவர்தான் சிவசக்தி சிவப்பிரகாச பிள்ளை. இவர் தற்போது கனடாவில் திருமதி சிவசக்தி சிவனேசனுக கலைத்தொண்டு புரிந்துவருகிருர்.

— மு. வாமதேவன்

---

# 'பன்னும்' அவசர அதிரடி

கராச்சியில் கடந்த வாரம் இடம்பெற்ற இரு சம்பவங்கள் உலக அரங்கில் முக்கியம் பெறுவனவாக உள்ளன.

இச்சம்பவங்களில் ஒன்று: அமெரிக்க 'பன்னும்' (Panam) போயிங் விமானக் கடத்தல் முறியடிப்பு. இரண்டாவது: பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவி செல்வி பெனுஸிர் பூட்டோ, தடுப்புக் காவலிலிருந்து விடுதலை செய்யப்பட்டமை.

'பன்னும்' போயிங் விமானக் கடத்தலை பாகிஸ்தான் அதிரடிப்படையினர் முறியடித்த சம்பவம், அமெரிக்கா உட்பட பல உலக நாடுகளில் பாராட்டப்பட்டுள்ளது.

விமானக் கடத்தல் ஒன்றை பாகிஸ்தானியர்கள் முறியடித்தது இது முதல்தடவையல்ல. ஓரிரு வருடங்களுக்கு முன்னர் உள்ளூர்ச் சேவையிலீடுபட்டிருந்த 'இந்தியன் ஏயர்லைன்ஸ்' விமானமொன்றை சீக்கிய தீவிரவாதிகள் கடத்திச் சென்று பாகிஸ்தானில் தரையிறக்கியிருந்தனர். அப்போது பாகிஸ்தானிய அதிரடிப்படையினர் மிகவும் சாதுரியமாக விமானத்தினுள் புகுந்து கடத்தல்காரர்களை மடக்கிப்பிடித்தனர். அன்று அவ்விமானத்தில் முற்றிலும் இந்தியப் பயணிகளே இருந்தனர். விமானச்சுத்திகரிப்பு ஊழியர்கள் போலவேடந்தரித்துச்சென்றே பாகிஸ்தானிய அதிரடிப்படையினர் ஆட்சேதத்துக்கு இடமில்லாமல் அன்று தமது பணியை முடித்தனர்.

இத்தடவை இடம்பெற்ற விமானக்கடத்தல் முறியடிப்பு, விமானச் சொந்தக்காரர்களான அமெரிக்கர்களுக்கும், அதிரடியில் இறங்கிய பாகிஸ்தானியர்களுக்கும் திருப்தியளிப்பதாக இருக்கலாம். ஆனல் சற்று நிதானமாக ஆராயுமிடத்து இந்நடவடிக்கை ஓர் அவசரப்பட்டுவிட்ட விடயமாகவே காணப்படுகின்றது.

முன்னைய முறியடிப்பில் காணப்பட்ட சாதுரியம், இத்தடவை சிறிதளவேனும் வெளிப்படவில்லை. 20 பயணிகள் இக்கடத்தல் முறியடிப்பில்கொல்லப்பட்டனர்; இவர்களில் அநேகர் இந்தியர்கள்.

விமானத்தைக் கடத்தியவர்கள் நான்கு அரபுக்காரர்களாவர். இவர்கள் சைப்பிரஸில் சிறைவைக்கப்பட்டுள்ள தமது சகாக்களை விடுதலை செய்யும்படி கோரியே இந்த பணய நாடகத்தில் இறங்கினர்.




கராச்சி விமான நிலையத்தில் கடத்தல்காரர்கள் பிடியில் அமெரிக்க 'பன்னும்' விமானம் இருந்தவேளை. அக்கடத்தல்காரர்கள் விமானப்பயணிகளுடன் மிகவும் பண்பாக நடந்துகொண்டனர் என்று ஒரு பயணி தெரிவித்தார். மரணபயம் எதுவும் தம்மிடம் இருக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இந்நிலையில், பாகிஸ்தானிய அதிகாரிகள் கடத்தல்காரர்களுடன் பேச்சுக்களை சலைக்காது நடத்தியிருக்கலாம். அவர்களின் மனநிலைக் கேற்றவாறு நடந்துகொண்டிருக்கலாம். ஆனல் அத்தகைய முயற்சியில் நம்பிக்கை வைக்காது திடீர் முற்றுகையை நடத்திக் கடத்தல்காரர்களை மடக்கியுள்ளனர்.

இத்திடீர் பாய்ச்சலின் விளைவே, 20 அப்பாவிப் பயணிகளின் மரணங்களாகும். ஆனல் கடத்தல்காரர்கள் உயிருடன் பிடிபட்டுள்ளனர். ஒருவர் பின்னர் இறந்தார்.

பாகிஸ்தானிய அதிரடிப் படையினர் விமானத்தை நெருங்கியபோது கடத்தல் காரர்களே பயணிகளை நோக்கிச் சுட்டதாக பாகிஸ்தானிய தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. விமானத்தினுள் அதிரடிப் படையினர் நுழைந்து சரமாரியாகச் சுட்டதிலேயே பயணிகள் பாதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

எது எப்படியிருந்தபோதிலும் 20 பயணிகள் கொல்லப்பட்ட நிலையில் இந்த விமானக் கடத்தல் முறியடிப்பை பாகிஸ்தான் ஒரு வெற்றியாகக் கொள்ளுகிறது. சுமார் 250 பேர் இருந்த அவ்விமானத்தில் பெரும்பான்மையானேர் உயிர் தப்பியதால் அது அவ்வாறு பெருமிதம் கொள்ளலாம். ஆனல் அப்பெரும்பான்மை பயணிகள் உயிர்தப்பியது பாகிஸ்தானிய அதிரடிப்படையினரால் அல்ல.

திருமதி மிஷ்ரா என்ற விமானப் பணிப்பெண் ஒருவராலேயே அவர்கள் தப்பினர். ஏனெனில் அதிரடிப் படையினர் விமானத்தினுள் நுழைந்ததும், விமானத்தின் அவசரவேளைக் கதவை அப்பெண்ணே திறந்து விட்டுள்ளார்.

இதனையடுத்தே அநேக பயணிகள் அக்கதவின் ஊடாக வெளியே குதித்து உயிர் தப்பினர். இறுதியாக அப்பெண் விமானத்தினுள்ளேயே தமது கடமையைப் பெரிதென மதித்துப் பயணிகளை வெளியேற்றிக்கொண்டிருந்தவேளை, அதிரடி அமர்க்களத்தில் குண்டடிபட்டு மரணமானர்.

இவரின் இத்த உயரிய பணியை மதித்து பாகிஸ்தானிய 'கைதிகள் பாதுகாப்புச் சங்கம்' மரணத்துக்குப் பிந்திய உயர் கௌரவமொன்றை அவருக்கு வழங்கியுள்ளது. எனவே இவ்விமானக் கடத்தல் முறியடிப்பின் வெற்றி பாக். அதிரடிப்படைக்குரியதல்ல திருமதி மிஷ்ராவையே அதுசாரும் என்பது குறிப்பிடத்தக்கது.

★

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் செல்வி பெனுஸிர் பூட்டோ மூன்றரை வாரகால தடுப்புக்காவலின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

**அனந்த்**

பாகிஸ்தானில் தனது தந்தையாரான முன்னுள் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோவின் மரணத்துடன் ஜனநாயகமும் மரணித்துவிட்டதாகக் கூறும் செல்வி பெனுஸிர் பூட்டோ, மீண்டும் ஜனநாயகத்துக்கு உயிர்கொடுக்கவே தாம் போராடுவதாகக் கூறி வருகின்ருர்.

பிரிட்டனில் அஞ்ஞாதவாசமிருந்தபின்னர் தாயகம் திரும்பியுள்ள செல்வி பூட்டோ, தமது இம்முயற்சியில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குபவராகவே காணப்படுகின்ருர்.

பாகிஸ்தான் இராணுவஆட்சியாளர்களும் இவரைவிட்டபாடில்லை. பெனுஸிரின் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் களைகட்டும் வேளைகளிலெல்லாம் அவற்றில் குறுக்கிட்டு அவர்கள் எதிர்நடவடிக்கைகளில் இறங்கியே வருகின்றனர்.

கடந்த மாதம் 14-ந் திகதி அரசு எதிர்ப்புப் பிரசாரங்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி செல்வி பெனுஸிரை பாக் அரசாங்கம் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்தது இவருடன் இவரது ஆதரவாளர்கள் பலரும், வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கைதாகிக் காவலில் வைக்கப்பட்டனர்.

செல்வி பெனுஸிர் பூட்டோ கடந்த ஜூன் மாதம் பிரிட்டனிலிருந்து தாயகம் திரும்பியதைத் தொடர்ந்து பாகிஸ்தான் மக்கள் கட்சியினரின் உத்வேகம் பெருமளவு அதிகரித்திருந்தது. பெனுஸிர் ஆதரவு அலைகள் பாகிஸ்தான் அரசைத் திக்குமுக்காடச்செய்தது.

வெளிநாட்டு அரசியலாளர்கள்கூட பிரமிக்குமளவிற்கு பெனுஸிர் மீதான ஆதரவு பாகிஸ்தானில் தீவிரமடைந்துள்ளது. இந்நிலையிலேயே கடந்த மாதம் சிந்து மாகாணத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றையடுத்து செல்வி பெனுஸிர் பூட்டோ பாக். ஆட்சியாளர்களால் கைதுசெய்யப்பட்டு மூன்றரை வாரகாலம் காவலில் வைக்கப்பட்டார்.

பெனுஸிரைக் கைது செய்வதன் மூலம் அவர் மீதான அரசியல் செல்வாக்கில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தலாம் எனப் பாகிஸ்தானிய அரசு எதிர்பார்த்தது. ஆனல் பெனுஸிர் கைதானதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டோரில் 25 பேரின் உயிரை மட்டுமே அதனல் பறிக்க முடிந்தது.

( 8ம் பக்கம் பார்க்க)

## ஆறு வகை உயிரினம்

ஆறறிவு உடையவன் என்பது மனிதனுக்கு உள்ள சிறப்புத் தன்மைகளுள் ஒன்று. யாராவது ஒருவர் தவறு செய்து துன்புறும்போது ஆறறிவு படைத்த மனிதனுக இருந்தும் இப்படிச் செய்துவிட்டானே என்று பலர் பச்சாதாபப்படுவதைக்காணலாம். மனிதனுக்கு உரிய ஆறுஅறிவுகள் எவை? ஆறறிவுக்குக் குறைந்த அறிவுள்ள உயிரினங்கள் எவை? என்பது பலருக்குத் தெரியாது. ஓரறிவு உயிர்கள் எவை? ஈரறிவு உயிர்கள் எவை என்பதைத் தொல்காப்பியர் ஒழுங்குபடுத்திக் கூறுகின்றார்.

### ஓரறிவுயிர்

ஓரறிவுயிர் என்றால் உடம்பினால் வெப்பம், தட்பம், வன்மை, மென்மை முதலியவற்றை அறியும் ஆற்றல் பெற்றிருத்தலாகும். ஓரறிவு உயிர்களானவை புல்லு, மரம் முதலியனவாகும்.

### ஈரறிவுயிர்

உடம்பினால் அறியும் அறிவும் நாவினால் சுவைகளை உணரும் அறிவும் உள்ள உயிர்கள் ஈரறிவு படைத்த உயிர்கள் எனப்படும். நந்து, முரள், சங்கு, இப்பி போல்வனவாகும்.

### மூவறிவுயிர்

உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் அறியும் தன்மைஉடையன. மூவறிவுயிர்களாகும். சிதல், எறும்பு, அட்டை முதலியன மூவறிவு உயிர்களாகும்.

### நாலறிவுயிர்

நாலறிவு படைத்த உயிர்களாவன: உடலறிவு, நாவறிவு, மூக்கறிவு ஆற்றல்களோடு கண்ணினாலும் அறியும் திறமை படைத்தனவாகும். நண்டு, தும்பி, வண்டு முதலிய உயிரினங்கள் நாலறிவு உடையன.

### ஐயறிவுயிர்

உடலறிவு, நாவறிவு, மூக்கறிவு, கண்ணறிவு என்பவற்றோடு செவியினாலும் அறியும் தன்மையுடைய உயிரினங்கள் ஐந்தறிவு உடையனவாகும். விலங்கு, பறவை, மீன் முதலே ஆகியன ஐயறிவு படைத்த உயிரினங்களாகும்.

### ஆறறிவு உயிர்

ஐயறிவு படைத்த உயிர்களின் ஆற்றலோடு மனத்தினால் சிந்தித்துப் பகுத்தறியும் ஆற்றல் படைத்த மனித உயிர்கள் ஆறறிவு உடையன. ஆறாவது அறிவான பகுத்தறிவால் நன்மை தீமைகளை நூலறிவு கொண்டும் பிறவுயிர்களின் துன்பங்களையும் அத்துன்பங்களை நீக்கும் முறைகளையும் அநுபவநூலறிவும் என்பனகொண்டும் அறியும் தன்மை மனிதர்க்கே மிகஉரிமை உடையன. ஆதலால் ''மக்கள் தாமே ஆறறிவுயிரே'' என்று தொல்காப்பியர் கூறினார்.

—அருளாளன்

## வழிபாட்டு முறை

மரமென்று பார்ப்பவருக்கு யானை தெரியாது. யானை என்று பார்ப்பவருக்கு மரம் தெரியாது மரத்தை மறைத்தது மாமத யானை என்பது திருமந்திரம். ஆலயத்திற்குச் செல்பவர்கள் பார்வையைப் பல பக்கம் செலுத்தாமல் நிலத்தை நோக்கிய வண்ணம் வலம் வந்து இறைவனிடத்தில் பார்வையைச் செலுத்தி வழிபடவேண்டும். இறைவனுடைய திருவருளைப் பெறும் பொருட்டுக் கோயிலுக்குச் செல்கின்ற நாம் அங்குமிங்கும் பார்வையைச் செலுத்தாது பக்திப் பரவசத்துடன் வழிபாடு செய்யவேண்டும்.

''வாரியார் வாய்மொழி''

அசல் EVEREADY® எவரெடி பூனையை இனம் கண்டால் பரிசு






மேலும் மாதாந்தம் 100 எனஜைஸர் விளக்குகள்!

இதோ! எவரெடி ஹெவி டியூட்டி பட்டரிகளை வாங்குவோருக்கு மாபெரும் பரிசுத் திட்டம்:

இதுமிகவும் சுலபமான போட்டி. இவ்விளம்பரத்திலுள்ள் ஒன்பது பூனைகளையும் நன்றாக அவதானியுங்கள். இவற்றுள் எட்டுப்பூனைகள், எவரெடி பட்டரியில் காணப்படும் எவரெடி பூனையைவிட, வித்தியாசமாக உள்ளன. ஆனால் ஒரேயொரு பூனை மாத்திரம் அசல் ''எவரெடி பூனை'' ஆகும்.

அதனைச் சரியாக இனம் கண்டுபிடிக்கும் அதிர்ஷ்டசாலிக்குரிய பரிசு ரூபா 100,000!

மேலும் 300 எனஜைஸர் விளக்குகள் !!

போட்டி முடிவு திகதி 1986 நவம்பர் 30.

பரிசை வெல்ல நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

இதில் காணப்படும் பிரவேசக் கூப்பனை நிரப்புங்கள். எவரெடி ஹெவி டியூட்டி பட்டரிகளை இணைத்துச் சுற்றியுள்ள பொலித்தீன் உறைக்குள் காணப்படும் ''வெல்லுங்கள் ரூபா 100,000/-'' என்ற சொற்கள் அடங்கிய துண்டை கூப்பனில் குறிப்பிட்ட இடத்தில் ஒட்டியபின், எவரெடி, த. பெ. இல. 1477, கொழும்பு என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

ஒருவர் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம், ஆனால் ஒவ்வொரு கூப்பனிலும் ''வெல்லுங்கள் ரூபா 100,000'' என்ற சொற்களடங்கிய துண்டு ஒட்டப்பட்டிருக்கவேண்டும்.

பரிசுக் குலுக்கலும் பரிசுகளும்

100 எனஜைஸர் விளக்குப் பரிசுகளுக்கான குலுக்கல் முறையே செப்ரெம்பர் 30, ஒக்டோபர் 31, டிசம்பர் 1 ஆகிய திகதிகளில் இடம்பெறும். இதில் மொத்தமாக 300 விளக்குப் பரிசுகள் உண்டு.

மாபெரும் ஜாக்பொட் பரிசுத்தொகை 100,000 ரூபாவுக்கான குலுக்கல் டிசம்பர் 1ந் திகதியன்று நடைபெறும்.

நீங்கள் அனுப்பும் போட்டிக் கூப்பன்கள் ஒவ்வொரு பரிசுக் குலுக்கலுக்கும் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதனால் ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகளை நீங்கள் வெல்லமுடியும். பரிசுபெற்றோர் விபரம் புதினத்தாள்களில் பிரசுரிக்கப்படும்.

தாமதிக்காதீர்கள் - போட்டிக் கூப்பன்களை அனுப்பத் தொடங்குங்கள்!

யூனியன் காபைட் சிலோன் லிமிடெட், பீனிக்ஸ் அட்வடைசிங் சேவிசஸ் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தவர்களும் இப்போட்டியில் பங்குபற்ற அருகதையற்றவர்கள்.

அசல் எவரெடி பூனையின் இல: ☐

பெயர்: ____________

விலாசம்: ____________

பட்டரி வாங்கிய கடைகாரரின் பெயரும் விலாசமும்: ____________

துண்டை இங்கு ஒட்டுக

Licence No.S/533




உலகோர் நாடி வாங்குவது எவரெடி

Phoenix

## எமது சிறுகதை

# நெஞ்சின் அலைகள்

**கோப்பாய் பிரபா**



அந்த அதிர்ச்சியிலிருந்து சங்கர் விடுபடவில்லை. அவனையும் அறியாமல் அவனிதயம் மௌனமாகக் கண்ணீர் வடித்தது. அதற்கு மேலும் அந்த இடத்தில் இருந்தால் நிச்சயம் மயங்கியே விழவேண்டும். என்ற நிலையில் அங்கிருந்து வெளியேறினான் சங்கர்.

நேராக வீட்டையடைந்த சங்கருக்கு அவனது அறையில் தொங்கிக் கொண்டிருந்த அவனது நிழல் படம் ஏதோ பார்த்து நகைப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. எதையுமே பொருட்படுத்தாதவனாக, கட்டிலில் சரிந்தான்.

அன்று காலை சிந்துஜாவைச் சந்தித்தபோது கூட சங்கர், அதை உறுதிசெய்துவிட்டுத்தான் அங்கு சென்றான். அப்படியிருந்தும் அந்த இடத்தில் அவள் கூறிய வார்த்தைகளால் அவன் நிலைகுலைந்தான். அந்த நினைவுகள் சங்கரின் நெஞ்சத்தில் முள்ளாகத் தைத்தன.

●

அன்று ஒரு புதன்கிழமை என்றுமில்லாத உற்சாகத்தில் அவனிதயம் குதூகலித்தது. ரோஜா மொட்டாகச் சிவந்து குவிந்திருந்த அந்த மெல்லிதழ்கள் அவன் பார்வைபட்டு மலர்ந்து சிரிக்குமென்று சங்கர் எண்ணிப்பார்க்கவில்லை.

வநாள்தோறும் சங்கர் அலுடிலகம் நோக்கி வந்துகொண்பருக்கையில், சிந்துஜா ஆஸ்பத்திரி நோக்கிச் சென்றுகொண்டிருப்பாள். அவன் விழிகள் அந்த மெல்லுடலை நோக்கும்போதெல்லாம், அவள் விழிகள் நாணித் தரையில் படரும். ஏமாற்றமும், ஏக்கங்களும் நிறைந்து தவித்த அவனுக்கு அன்றைய நிகழ்ச்சி என்றுமில்லாத ஆனந்தத்தை அளித்ததில் வியப்பில்லை.

இனி எப்படியாவது ஒருமுறை சிந்துவுடன் கதைத்துவிடவேண்டும் என்று தீர்மானித்தான் சங்கர்.

எவ்வாறு அவளுடன் கதைப்பது என்று சிந்தித்துத் தவித்த சங்கருக்கு ஒரு எண்ணம் உதித்தது. அவளைக் காணும்போது எப்படியாவது ஒருதொடர்பை ஏற்படுத்தும் வகையில் செயல்பட வேண்டுமென நினைத்தான்.

சிந்துஜா மெல்ல நடைபயின்று வருவதை அவதானித்துக் காத்திருந்த சங்கருக்கு, அவள் நெருங்கி வர வர அவனுடல் தளர்ந்து, வியர்த்தது, இதயம் எல்லைமீறித் துடித்தது. இருந்தும் ஏதோ ஒரு துணிவை மனதில் வரவழைத்துக் கொண்டவனாக, ''மிஸ் நீங்க ஸ்டோறி புக் வாசிக்கிறநீங்களா'' என்றான்.

அவள் விழிகள் துரு துரு வென்று துடித்தன. சட்டென்று பதிலேதும் கூறமுடியாதவளாக ஓசையின்றி அவளிதழ்கள் மலர்ந்தன. தயங்கியவாறு அவள் தலையசைத்தாள்.

கொடுப்பதற்கென்றே கடையில் புத்தம் புதிதாக அன்று வாங்கிய அந்த நாவல் புத்தகத்தைச் சங்கர் நீட்டினான். செங்காந்தள் மலரென நீண்டிருந்த அவள் விரல்கள் மெல்ல அந்தப் புத்தகத்தை வாங்கின.

அந்த முதல் சந்திப்பு வெற்றியளித்தமை சங்கருக்கு எல்லையில்லா ஆனந்தத்தை அளித்தது. இருந்தும் அவன் நெஞ்சில் ஒரு துன்பம் நிலவத்தான் செய்தது, அவளுடைய பெயரைக் கேட்டுச் சிறிது நேரம் கதைத்தாவது இருக்கலாமே என்று,

சிந்துவுக்கு அன்று வேலையே ஓடவில்லை. அந்த நாவலின் பக்கங்களைத்தான்புரட்டி ஏதாவது அர்த்தங்கள் உள்ளனவா என்று தேடியவண்ணமிருந்தாள். எதேச்சையாகச் சிந்துவின் கண்களில் அந்தவரி பட்டது: ''மலரும் மங்கையும் ஒன்றென்பார்கள் ஏனெனில் மலருக்கு ஒருதரம்தான் பூஜை மங்கைக்கும் அப்படியே.

'இந்த வரிகளை நான் படிக்கட்டும் என்றுதான் எனக்கு இந்தப் புத்தகத்தை அவர் கொடுத்தாரோ?' என்று நினைத்தாள் சிந்துஜா. 'அவர்' என்று அவள் மனம் உச்சரிக்கும்போதெல்லாம் ஒரு அந்தரங்கமான உணர்ச்சி அங்கே ஊற்றெடுத்தது,

சங்கரைப் பொறுத்தமட்டில் வாங்கிய புத்தகத்தைக் கூட ஒழுங்காகப் பார்க்கவில்லை. எதுவாக இருந்தாலும் சரி எப்படியும் அவளிடம் கொடுத்துவிடவேண்டும் என்றே எண்ணிச் செயல்பட்டான்.

நாட்கள் நகர்ந்தவண்ணமிருந்தன. சங்கர் வாங்கிய நாவல்களும் அதிகரித்தன. எப்படியாவது அவள் மீதுள்ள காதலை வெளிட்படையாகக் காட்டிவிடவேண்டும் என நினைத்தான்.

அவளுக்குக் கொடுப்பதற்கு வைத்திருந்த நாவலுடன் ஒரு கவிதையையும், ஏதோ தெரிந்தளவில் எழுதி அதனுடன் வைத்துக் கொண்டு அவளுக்காக வீதியில் தவமிருந்தான். சங்கருக்கு ஏமாற்றம்தான் கிடைத்தது. ஏனோ சிந்துஜா அன்று அவன் கண்களில் சிக்காமல் சென்றுவிட்டாள்.

எப்போது விடியும் என்று காத்திருந்த சங்கர் விடிந்ததும் விடியாததுமாக அவள் வரவிற்காகத் தவமிருந்தான்.

கார் கூந்தல் அலைபாய, கயல்விழிகள் கண் சிமிட்ட, கள் வடியும் பூமடல்கள் தாள் திறக்க சிந்து என்ற அழகு சிலை அன்னநடை பயின்று நெருங்கி வருவதைக் கண்ட சங்கரின் இதயம் 'சில்' லென்றிருந்தது,

பழைய நாவல்களை அவளிடமிருந்து பெற்ற சங்கர், இந்தப் புதிய நாவலைப் புனிதமாக்கிக் கையளித்தான்: அவளின் நாணம் கலந்த வேகம் அவனுக்குச் சிரிப்பாகவிருந்தது. அதில் கூட ஒரு இனிமை இருக்கவே செய்தது.

சங்கரின் நாவலைத் திறந்த சிந்து, ஒருகணம் திகைத்தாள். அழகாக மடிக்கப்பட்டிருந்த வெள்ளைத்தாளை மெதுவாகப் பிரித்துப்படித்தாள். என்ன செய்வதென்றே அவளுக்குப் புரியவில்லை. அந்தக் கவிவரிகள் அவன் எண்ணத்தைப் பிரதிபலிப்பதை உணர்ந்தவளாக மீண்டும் மீண்டும் அந்தக் கவிதையையே படித்தாள்.

''கயல்விழிகள் இமை
திறக்க
கவிமொழிகள் இதழ்
விரிக்க
புதுஇசை கார்குழல்
மீட்ட
பூமகளே நீ வருவாய்
என்னிதயம் நெருப்பாக
என்னிளமை உனைத் தேட
கண்மணியே உனைக்காண
காத்திருந்து நான்
துடிப்பேன்''

அதைப் படித்துவிட்டு என்ன செய்வாள் சிந்து?' என்ற ஆய்வில் மூழ்கினான் சங்கர் 'சில வேளை உடன் பதில் தருவாள்' என்று தனக்குத் தானே கூறித் திருப்தியடைந்தான்.

வழமையாகச் சிரித்த முகத்துடன் வரும் சிந்துஜா அன்று சற்று வாடிய முகத்துடன் வருவதைக் கண்டதும் சங்கருக்குத் தலையே சுற்றியது. சட்டென்று அவன் நிலைகுலைந்தான். 'அந்தக் கவிதை ஏதோ விபரீதமாக அமைந்துவிட்டதோ' என்று திகைத்தான்.

எதிர்பாராத விதமாக சிந்துஜாவும் சங்கரைக் கண்ட அதிர்ச்சியில் அந்தப் புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு எதுவுமே பேசாமல் அகன்றாள்.

அதே கவிதை மீண்டும் அவனையே பார்த்துச் சிரித்தது. அவளடந்த வேதனைக்கு எல்லையே இருக்கவில்லை. 'இந்தப் பெண்கள் இப்படித்தான் இரக்கமற்றவர்கள்'' என்றது அவனிதயம்.

அந்தப் புத்தகத்தின் ஒரு பக்கம் மட்டும் மடிக்கப்பட்டிருந்ததை அவதானித்த சங்கர் சற்றுக் கவனமாக அதைப் படித்தான். அந்த நாவலில் ஓரிடத்தில் வந்த,

''மரத்தைவிட்டு மலர்பிரிந்தாலும். மலரை விட்டு மணம் பிரியாது.'' என்ற வரிகளை கோடிட்டு 'சிந்து' என்று குறிப்பிட்டிருந்தாள்.

அந்த இளஞ்ஜோடிகளின் காதல் இறக்கைக் கட்டிப் பறந்தது. இளமையின் இன்ப ஊற்று இருவர் இதயங்களிலும் வடிந்தது.

அந்தக் காதல் அத்தியாயத்தின் கடைசிப் பகுதியாகத்தான் சங்கர் நேரடியாக அவள் பெற்றோரிடம் வந்து கேட்பதாக, சிந்துவிடம் சேட்டான். அதற்குச் சம்மதித்தாள் சிந்து.

அன்றும் பலதடவைகள் சிந்துவிடம் இவ்விடயம் குறித்துக் கேட்டுவிட்டுத்தான் அவள் வீட்டுக்குச் சென்று துணிச்சலாகச் சிந்துவின் பெற்றோரிடம்வாய்விட்டுக் கேட்டான்.

அப்போதுதான் சங்கர் நிலைகுலைந்தான் அவனிதயம் வெடித்துவிடும்போல இருந்தது. ''சிந்து இது உண்மையா எத்தனை நாட்கள் இந்தத் தொடர்பு'' என்று அவள் தந்தை அதட்டலாகக்கேட்டபோது அவள், 'எனக்குத் தெரியாது' என்று அகன்றுவிட்டாள்.

அவர்களின் பார்வை அவனைக் கேலி செய்வது போன்றிருக்கவே, அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக்கொள்ள இயலாதவனாக திரும்பிவிட்டான் சங்கர்.

அந்த நினைவுகளுக்குத் திரையிடுவது போல தலையை யாரோ தடவுவது போன்ற உணர்வு தென்படவே மெல்லப் படுக்கையிலிருந்தும் கண் விழித்துப் பார்த்தான். அவன் சோகத்திற்குத் தாயின் பார்வை மருந்தாகவிருந்தது.

''சரியான காய்ச்சல் மாதிரி கிடக்கு என்னைப் படுக்க விடுங்கோ'' என்றவன் கட்டிலே தஞ்சமென்று கிடந்தான்.

●

நாட்கள் நகர்ந்தன. சங்கரின் இதயகாயம் மட்டும் மாறவேயில்லை. அவனால் சிந்துவை மறக்க இயலவில்லை. 'என்னதான் பெற்றோருக்குப் பயமிருந்தாலும் உண்மையை மறைக்கமுடியுமா? இனி எப்படித்தான் இன்னுமொருவனை மாலையிட்டு வாழப்போகிறாள். அவளும் ஒரு பெண்ணா. அன்பு, இரக்கம், துணிவு இந்த ஒன்றும் இல்லாதவளையா நான் காதலித்தேன்'' என்று அவனிதயம் துடிக்கிம்போதெல்லாம் 'அதுதான் விதி' என்று அவள் பக்கம் சமாதானம் சொல்வான். இருந்தும் இனி அவளைச் சந்திப்பதில்லை என்று முடிவெடுத்தான்.

எத்தனையோ இடங்களிலிருநது சங்கருக்குப்பேசி வந்தபோதும் எதற்குமே அவன் சம்மதிக்கவில்லை. இங்கிருந்தால் எப்படியும் சிந்துவைக் காணநேரும் என்ற நோக்கில் சங்கர் மாற்றம் பெற்றுக் கொழும்புக்குச் சென்றுவிட நினைத்தான்.

இறுதியாக ஒருமுறை அவளைப் பார்த்துவிடவேண்டும் என்ற துடிப்பில் சங்கர் ஆஸ்பத்திரிக்கே சென்றான். அங்கே அவளைக் கண்டதும் அவனிதயம் விம்மியழுதது. வெள்ளை ஆடையில் அவள் புரியும் தூயதாதிப் பணிக்கும் அவள் செய்கைக்கும் அர்த்தமற்றதுபோல் இருந்தது அவள் செய்கை.

எந்தவித சலனமும் இன்றி சிந்துஜா அவனைக் கண்டும் காணாதவளாக அகன்றாள்.

சங்கர் கொழும்புக்கு மாற்றலாகி வந்து நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. அவனிளமையும் துடிப்பும் அந்த இதயத்தின் வேதனைக்கு இரையாகிவிட்டன. சிந்துவைப் பற்றிய எண்ணம் மேலிடும்போதெல்லாம் அவன் சிந்தை இழந்தநிலையில் குடித்துவிட்டு வீதியோரமாகக் கிடப்பான்.

எப்படி எப்படியெல்லாம் வாழவெண்டும் என்று எண்ணிய அவன் வாழ்க்கை இன்று எப்படியும் வாழலாம் என்றாகிவிட்டது.

இதனிடையே சிந்துஜாவின் திருமணமும் நடந்தேறிவிட்டதாக அறிந்தான். தன்னை ஏமாற்றிவிட்டாளே என்பதைவிட எப்படியும் அவள் நன்றாக வாழவேண்டும் என்று எண்ணினான்.

தெரிந்தவர்கள் எவரேனும் கொழும்புக்கு வந்துவிட்டால் போதும் ஏதோ ஒருவழியில் சிந்துவைப் பற்றியறியத்தவறமாட்டான்.

வீட்டிலிருந்து ஒருதடவை வருமாறு கூறிவரும் கடிதங்களுக்கெல்லாம், அலுவலகத்தில் லீவு தருகிறார்கள் இல்லை என்றே பதில் எழுதிவிடுவான் உண்மையில் அவனுக்கு லீவும் முடிந்து நோப்பே' யாகத்தானிருக்கும்.

வெகுநாட்களின்பின் வந்த அந்தக் கடிதத்தின் கையெழுத்தைப் பார்த்தவுடன் சங்கருக்கு ஆச்சரியமாகவிருந்தது. அவனது உற்ற நண்பன் எழுதியிருந்தான் அநாவசியமாக அவன் எதுவும் எழுதுவதில்லை என்பது சங்கருக்குப் புரியும்.

அதிலும் ஒருதுன்பம் இமையோட விழியோரம் கசிந்த நீரை விரல்களால் துடைத்தெறிந்தான். ''சிந்துவின் கணவன் வெளிநாடு சென்றபோது அகால மரணமாகிவிட்டான். இது நடந்தே பல மாதங்கள் ஆகிவிட்டன'' என்ற செய்திதான் சங்கருக்கு வேதனையை மீண்டும் கொடுத்தது.

இம்முறை ஊருக்குச் செல்ல வேண்டும் என்ற புதிய ஆசை சங்கருக்குத் துளிர்த்தது எண்ணம்போலச் சகல ஏற்பாடுகளையும் செய்துகொண்டு புறப்பட்டான். அவன் முகத்தையே அவனால் நம்பமுடியவில்லை

(8 ம் பக்கம் பார்க்க)

---

## தெல்லியம்பதி வாழும் தேவி பதம் தொழுவோம்

இராகம்:கானடா தாளம்: ரூபகம்[சமம், துரிதகதி)

எடுத்தல்

மகிடனைக் கொன்றாயம்மா மகாசக்தியாகி நின்றாய்
மாயையை வென்றாயம்மா மாதவன் தங்கைநீயே!
(மகிடனைக் கொன்றாயம்மா)

தொடுத்தல்

தேரினில் வருகின்றாய் தேவரும் வருகின்றார்
தெல்லிப்பழையம்மா தேடியே நிற்கின்றோம்
[மகிடனைக் கொன்றாயம்மா]

ஒடுக்கல் I

திரிபுரசுந்தரியே திகழ் பரமேஸ்வரியே—உன்
பரிவினில் நாம்வாழ வந்தருள் சுந்தரியே
தரிசனை தந்திடுவாய் தரித்திரம் சங்கரிப்பாய்
பெரியவள் நீயல்லவோ ஜெயஜெயஜெய துர்க்கா!
[மகிடனைக் கொன்றாயம்மா]

ஒடுக்கல் -II

ஜெஜெஜெ துர்க்கா ஜெஜெ மகாகாளி
ஜெகமதில் வருகின்றாய் ஜெயம்பல தந்தருள்வாய்
கஜமுக கணபதியைக் கந்தனைத் தந்தவளே
ஜெஜெஜெ துர்க்கா ஓம் ஜெஜெஜெ துர்க்கா!
[மகிடனைக் கொன்றாயம்மா]

சங்கீதபூஷணம்
**எஸ். வி. பரமலிங்கம்**

# தாய்மொழிக்கல்வி அன்னையிலும் சிறந்த உயிரன்னை

பன்மொழிப் புலவர்
கா. அப்பாத்துரை

மனித இனத்தின் சாதனை கள் பல. மனிதனே கண்டு வியக்கும் அரும்பெரும் சாதனை கள்கூட அவற்றிடையேஉண்டு அவ்வெல்லாச் சாதனைகளுக் கும் அடிப்படையாய் உதவு வது மொழியே. அறிவுநூல் வளர்ச்சி, ஆட்சி, சமுதாய வாழ்வு, சமயம், கலை, நாகரி கம்—எதுவுமே மொழியில்லா விட்டால் இல்லை.

மொழி மனித நாகரிகத் துடன் நாகரிகமாக வளர்வது. மனித நாகரிகத்தை வளர்ப் பது. மனிதன் அறிவை யும் உணர்வையும், அனுபவத் தையும் தலைமுறை கடந்து தலைமுறை, ஊழிகடந்து ஊழி கொண்டு செல்வது, காலத் தையும் இடத்தையும்தாண்டி, இயற்கையை மனிதன் ஆட் கொள்ள உதவுவது அதுவே. சமுதாய வாழ்வுக்கு மட்டு மல்ல, குடும்ப வாழ்வுக்கும் மொழிதான் உயிர்மூச்சு.

மனித இன வாழ்வில் நாக ரிகம் அதன் அலைகடற் பரப்பு மட்டுமே; மொழியே அதன் ஆழ்கடற் பண்பு. நாகரிகம் மனித இனத்தின் உயர் குடி கள், ஆட்சி வகுப்பினர், செல் வர் ஆகியோர் வாழ்வை மட் டுமே அளாவி மேலோடிச் செல்லும் ஒரு படர்கொடி, மொழியோ கோமக்கள், குடி மக்கள் அடிமை, முதலாளி, தொழிலாளி, கற்றறிந்த புல வோர், கல்வியிற் பிற்பட் டோர், செல்வர், ஏழைகள் ஆகிய எல்லா இனப்பரப்புகளை அம் ஊடுருவி இன வாழ்வின் அடிநிலத்தில் ஆழ்ந்து ஊன் றிப்பரவிய ஒரு வேர்ப்பண்பு.

சமயம், இனம், தேசம் ஆகிய வற்றில் உயர்வு தாழ்வுக்கு இடமிருக்கலாம்; இருந்தே தருகிறது. ஆனுல் மொழியில், வாய்மொழியில எத்தகைய அடிப்படை உயர்வு தாழ்வும் இருக்கமுடியாது; எத்தகைய உயர்வு தாழ்வும் நீடித்து நிற்க வும் முடியாது. பேச்சுத்திறத் தில் குன்றிய பண்டிதரையும், அதில் மிஞ்சிய குதிரைக்கார ரையும் தாய்மொழியிலே மட் டும்தான் காணமுடியும்!

மனம் என்பது பெரும் பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச் சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர். மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப் பவரும் மக்களே, மொழியால் வளர்பவரும் மக்களே.

பலர் சேர்ந்து ஒரு சமுதாய மாய் ஓர் இனமாய் பழகி வாழ்வதற்கு துணையாக உள்ள சிறந்த கருவி மொழியே. பலர் ஓர் இனமாய் வாழ்கின்றனர் என்பதற்கு உண்மையான அறிகுறி அவர்களின் நிறம் முதலிய எவையுமல்ல; அவர் கள் பேசும் மொழியே உண் மையான அறிகுறி எனலாம். சமுதாய வாழ்வுக்கு அறிகுறி யாக உள்ள மொழியே அந்த சமுதாய வளர்ச்சிக்கு காரண மாக உள்ளது. சமுதாயத் தால் வளர்ந்து சமுதாயத்தை வளர்த்து வருவது மொழி யெனலாம்.

மக்களின் வாழ்வில் பிறந்த கலைமொழி; மக்களால் வளர்க் கப்படும் கலைமொழி; மக்களின் வாழ்வை நாகரிகமுடையதாக உயர்த்திவரும் அரிய கலையும் மொழியே.

ஒரு நாட்டின் உரிமைப் போர் வெறும் கல்லுக்கும் மண்ணுக்கும் உரிமைபெற்றுத் தரும் போர் அன்று கருத்துக் கும் வாழ்வுக்கும் உரிமை பெற் றுத்தரும் போரே ஆகும். கருத் திலும் வாழ்விலும் மொழியே உயிர் போன்ற கருவியாக கலந்து நிற்கிறது. ஆகவே நாட்டுரிமை என்பது நாட்டு மக்களின் வாழ்வுக்கும் இன்றி யமையாதமொழிக்கும் உரிமை யாகும். இதனுலேயே சிலர் நாட்டுப்பற்றும் மொழிப்பற் றும் இணைந்து செல்வன என்று கருதுவார். ஆதலின் நாட்டுப் பற்றுக்கொண்டவர் மொழிப் பற்றுடையவராக விளங்கு வார் என்று எதிர்பார்க்கப்பட் டது.

தாய்மொழிக்கல்வி இயற்கை யானதாகும். தமிழ் மண்ணில் வாழை வளமுற வளர்வது போல, சிறிது இடம் கொடுத் தாலும் இளைஞரின் மூளையில் தாய்மொழி விரைவில் வளர்ந்துவிடும்.

தாய்மொழி வாழ்வில் அரச னும் ஆண்டியும், புலவனும் புலமையற்றவனும், வணிக னும் துறவியும் ஒருநிலைப்பட்ட வர்களே. அவர்கள் யாவருமே எவ்வகை ஏற்றத்தாழ்வும் இல்லாமல் அதன் புகழில் தங்கு தடையின்றி சரிசமநிலையில் போட்டியிடமுடியும். போட்டி யிட்டிருக்கின்றனர். எடுத்துக் காட்டாக இரந்து திரிந்த கோமர் புகழை உலகாண்ட யூலியஸ்சீசர் அத்துறையில் வென்றுவிடவில்லை. கல்லா நடிகனுகிய சேக்ஸ்பியர் புக ழுடன் கற்றறிந்த புலமைக் கவிஞன் மில்டன் போட்டி யிட முடிந்ததே தவிர வெல்ல முடியவில்லை. வணிகராகிய கூலவாணிகன் சாத்தனுருடன் அரச துறவியாகிய இளங்கோ வும், துறவியாகிய திருத்தக்க தேவரும் சரிசமமாகவே போட்டியிட்டனர்.

உலகின் கவிஞர், எழுத்தா ளர், அறிவியல் புதுப்புனைவா ளர் ஆகியோரிடையே எத் தனைபேர் ஆட்சி வகுப்பினர், உயர் குடியினர்? எத்தனை பேர் செல்வர் கல்வி கற்றவர்? கல்விக் கோயில்களாகிய கல் லூரி பல்கலைக் கழகங்கள் தரும் பட்டங்களைப் பெற்றோர் தாம் எத்தனை பேர்? இக் கேள்விகளுக்குரிய விடை உல கப் பொதுமக்களுக்கு அதிர்ச்சி அளிப்பதாய் இருக்கும். உண் மையில் இக்கல்வி நிலையங்கள் கல்வி ஊற்றுக்களல்ல, கல்வி யூற்றின் அறிவு நீரை எங்கும் கொண்டு பரப்பும் குழாய்கள் மட்டுமே. அவை அறிவின் வான்மழையோ உயிராறு களோ அல்ல; வான்மழை நீரையும் உயிராற்று நீரையும் தேக்கிவைத்து வளம் பேணும். ஏரிகுளங்கள் மட்டுமே பொது வுடைமை அரசாக, முழு நிறை தேசிய அரசாக நாடு நிலவாத இடத்தில், அறிவுக் குழாய்களாகக்கூட அவை இயங்குவதில்லை. அறிவு பர வாமல் ஆட்சிவகுப்பினருக்குள் ளேயே இருக்கும் படிபேணும் அறிவுப் புதைவிடமாகவோ, அறிவையும் விற்பனைச் சரக் காக்கும் அறிவுக் கடையா கவோதான் இன்றைய உலகில் அவை இயங்குகின்றன.

அறிவூற்றாகவும், அறிவு மழையாகவும் உயிர்கலை ஆறாக வும் பயன்படுபவை உயர்குடி வாழ்வுமல்ல, கல்விக்கடை களுமல்ல, தாய்மொழியின் உயிர்வாழ்வாகிய பொதுமக் கள் வாழ்வே.

செல்வத்தைப் படைப்பவர் செல்வரல்ல, ஏழைத்தொழி லாளிகளே, அதுபோலவே அறி வுச் செல்வத்தைப் படைப்ப வர்கள் அறிவுக்கடை வணிக ராகிய போலி அறிஞரல்ல, ஏழைமக்கள் சமுதாயத்திற்கு உழைக்கும் உத்தமர்களே என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவ்வத் தாய் நிலமக்களுக்கு அவ்வத்தாய் மொழி, உடலைப் பெற்ற அன்னையினும் சிறந்த உயிரன்னையே. ஒவ்வொரு மொழியும் அவ்வம் மொழிக் குரிய எல்லையில் மனித இனத் தின் அறிவூற்றே, மனித இனப் பண்பாடு வளர்க்கும் கலைப்பண்ணையேயாகும்.

---

"தாய் பிள்ளையைப் பெறுகிறுள்; வளர்த்து விடு கிறுள்; அவ்வளவே- பிள்ளையின் வாழ்வுடன் தாய் வாழ்வதில்லை. பிள்ளையின் பிள்ளைகளை, பிள்ளை யின் பிள்ளைகள் தலைமுறைகள், வளர்ப்பதில்லை. மொழியும் நாடும் இனமும் அவற்றைத் திறம்பட ஆற்றுகின்றன."

மொழி ஓர் உயிரியக்கம் என்பர் மொழி நூலார். மொழியையும், மொழி சார்ந்து வளரும் நாட்டையும் இனத்தையும் நாம் 'தாய்' என்று குறிப்பிடுவது மிகை யணி வழக்கன்று; குறையணி வழக்கேயென்பதை இது காட் டும். உண்மையில் தாயின்பணி கூட மொழி, நாடு, இனம் ஆகியவற்றின் பணிகளைச் சுட் டிக் காட்டுமேயன்றி அவற் றிற்கு ஈடாகமாட்டாது.

தாய் பிள்ளையைப் பெறுகி றுள்! வளர்த்துவிடுகிறுள் அவ்வளவே. பிள்ளையின் வாழ் வுடன் தாய் வாழ்வதில்லை. பிள்ளையின்பிள்ளைகளை, பிள்ளை யின் பிள்ளைகள் தலைமுறைகள் வளர்ப்பதில்லை. மொழியும், நாடும், இனமும் அவற்றைத் திறம்பட ஆற்றுகின்றன.

உயிர்கள் அறியாமலே வள ரும் உயிர் போல, மொழியும் திட்டப்படுத்துவார் இல்லா மலே திட்டம் அமைந்து திட் டப்பட வளர்வது. அது வளர்ச்சி தளர்ச்சிகள் உறுவது மட்டுமன்று, வளர்ச்சி தளர்ச் சிகள் தாண்டி இனம் பெருக்கு வது, இனப்பெருக்கம் கடந்து இனம் வளர்ப்பது.

தொகுப்பு:
"கரவைகிழார்"

---

# ஆழ்ந்த உறக்கம் ஆரோக்கியத்துக்கு அவசியம்

—கோகிலா மகேந்திரன்—

இரவில் எந்தத் தொல் லையுமின்றி அமைதியாக நித் திரை செய்யும் குழந்தை குடும் பத்துக்கு ஒரு வரப்பிரசாதம் என்று சொல்லலாம். ஆனுல் எல்லாக் குழந்தைகளும் அப் படி இருப்பதில்லை.

மனதில் பதற்றம் அல்லது உணர்ச்சிக் குழப்பம் உள்ள குழந்தை இரவில் அமைதி யாக நித்திரை செய்யாது. ஆகவே, பகலில் குழந்தை மகிழ்வுடன் இருப்பதைத் தாய் கவனித்துக்கொண்டால் இரவில் எழுந்து சினப்பட வேண்டிய அவசியம் ஏற்படாது இருளுக்கு அல்லது பேய், பிசாசு, பூதம் ஆகியவற்றுக் குப் பயப்படும் குழந்தையும் இரவில் குழப்பமின்றி நித்திரை செய்யாது. பேய், பூதம், பிசாசு சம்பந்தப்பட்ட கதை களை ஒருபோதும் குழந்தை களுக்குக் கூறக்கூடாது. அப் படியானவை பற்றிப்பிள்ளை, சிறுவயதில் அறியாதிருப்பதே மிகவும் நல்லது வேறு யாரிட மிருந்தாவது அறிந்து கொள்ள நேர்ந்துவிட்டால், அவை வெறும் கற்பனைத் தோற்றங் களேயன்றி, உண்மையில் அப் படி ஏதும் கிடையா என்று பிள்ளைக்குத் தெளிவாகச் சொல்லி வைக்கவேண்டும்.

நாள்தோறும் நித்திரைக்குச் செல்லும் நிகழ்ச்சி முடிந்த வரை மகிழ்ச்சியான நிகழ்ச்சி யாக அமைதல் வேண்டும். படுக்கையில் பிள்ளைக்கு அரு கில் தாய் இருந்து பாடுதல், அல்லது மகிழ்வான, வேடிக் கையான கதைகள் சொல்லல் மிக நன்று. ஒரு போதும் குழந்தையைத் தண்டித்து அல்லது பயமுறுத்திப் படுக் கைக்குச் செல்லவிடக்கூடாது. படுக்கைக்குச் செல்லுதல் மன வேதனையுடன் தொடர்புபடுத் தப்பட்டால், குழந்தை முற் ருக நித்திரைக்குச் செல்வதை வெறுக்கும்.

மிகச்சிறு வயதிலேயே குழந் தையை இருளில் நித்திரை செய்யப் பழக்கிவிடவேண்டும். இரவில் வெளிச்சத்தில் உறங்க விடுதல், "இருள் என்பது பயப்படத்தக்க ஒன்று" என்ற குழந்தையின் நினைவை உறுதி செய்துவிடும். இந்தப் பயத் தைப் பின்னர் நீக்குவது மிக வும் கடினமாக இருக்கும். வளர்ந்த மனிதர்களில் பலர் இருளில் நித்திரை செய்ய முடி யாதவர்களாய் இருப்பது நாம் அறிந்ததே.

நித்திரையில் எழுந்து நட மாடும் நோய் சில குழந்தை களில் காணப்படும். குழந்தை இதைத் தன்னறிவின்றியே செய்யும். மிகவும் பதற்றமான மனமுள்ள குழந்தையிடம் இது பொதுவாகக் காணப் படும். சிலவேளை தனது கடந்தகால அனுபவம் ஒன் றைச் சித்திரிக்கும் முறையில் அல்லது அடிமனதில் மறைந் திருக்கும் ஒரு ஆவலைச் செய்து முடிக்கும் வகையில் இந்த இரவுநேர நடமாட்டம் அமை யும்.

இரவுநேரத்தில் அடிக்கடி எழுந்து வீரிட்டு அலறுவது சில குழந்தைகளில் பொதுவாகக் காணப்படும் இன்னொரு பிரச் சினை. பயங்கரமான கனவு களின்பின் குழந்தை விழித்துக் கொள்வதால் இது நடைபெற லாம். சிலவேளை குழந்தை நித்திரையாக இருக்கும் அதே சமயத்தில் பயந்து அலறும். அடிமனதின் பயங்கள் அல்லது ஆசைகளே இவ்வாறு வெளித் தோற்றம் பெறுகின்றன. ஆகவே பெற்றோர் அந்த நேரம் விழித்துக்கொண்டு குழந்தையைத் திட்டுவதற்குப் பதிலாக ஆதரவும் நம்பிக்கை யும் கொடுத்து உறங்க வைக்க வேண்டும்.

பொதுவாகக் குழந்தையின் பயங்கள், தேவைகள், ஆசை கள் ஆகியவற்றை அன்புட னும் ஆதரவுடனும் புரிந்து கொண்டு குழந்தையின் அமைதியான வாழ்வுக்கு உத வுவதே தாயும் அமைதியாக நித்திரை செய்யக்கூடிய வழி யாகும்.

---

## உண்மைக் கவிஞன்

ஒரு உண்மைக் கவிஞன் தவிர்க்க முடியாதபடி காலத்தின் குரலாகத் திகழ்கிறுன். தன்னுடைய உணர்ச்சிப் பெருக்குகள் விருப்பு வெறுப்புகள் நாட்டங்கள் சிந்தனை முடி வுகள் கொள்கைகள் கோட் பாடுகள் ஆகியவற்றைக் காலத்தின் குரலோடு மோதவிட்டு எதிரொலிக் கின்றுன். —ஜீவா

---

## உலக அரங்கு

(5ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே பெனுஸிர் தலைமை யிலான ஜனநாயக மீட்பு இயக்கம் நாளுக்குநாள் ஸ்திர மடைந்து வருவதையே மேற் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் சுட் டிக்காட்டுகின்றன.

ஆகையினுல் செல்வி பெனு ஸிர் பூட்டோ விரைவில் பாகிஸ்தானின் கொரஸோ னுக (பிலிம்பைன்ஸ் ஜனுதி பதி' மாறும் சாத்தியக் கூறு களே பெருமளவில் காணப்படு கின்றன எனலாம்.

---

## சிறுகதை

(7ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அளவுக்கு அது உருமாறி யிருந்தது.

சங்கரைக் கண்டவுடன், அனைவருக்கும் எல்லையற்ற மகிழ்ச்சி. இனி வரமாட்டான் என்று முடிவுகட்டியிருந்த அவன் பெற்றோர் சகோதரர் களுக்கும், அவன் போக்கில் ஒரு புதுத்தெம்பு தெரிகிறதா என்பதையறிவதில் ஒருவேகம்

இராஜ உபசரணை நிலவிய தைக்காண சங்கருக்குமேசற்று அமைதி தெரிந்தது.

இருநாட்கள் கழிந்தன. மீண் டும் கொழும்புக்குத் திரும்பி விடவேண்டும் என்று நினைத் தான் சங்கர், "சங்கர் உன்னை ஆஸ்பத்திரியில் ஒரு நேர்ஸ் அடிக்கடி விசாரிப்பா உனக் குத் தெரியுமாடா" என்ற தாயின் கேள்வியில் பிரமை பிடித்தவனுனன் சங்கர். "ஆ தெரி..... யும்" என்றவன் அதற்குமேல் எதுவுமே பேச வில்லை.

அவன் செய்வதற்கென்று வந்ததுபோல அங்கு நின்ற மோட்டார் சைக்கிளில் சங்கர் ஆஸ்பத்திரி நோக்கி விரைந் தான், ஒருதடவை சிந்துவைப் பார்த்துவிடவேண்டும் என்ற துடிப்பில் அந்த சைக்கிளின் வேகம் இரட்டிப்பானது.

ஆஸ்பத்திரியில் பரபரப்பாக இருந்தது. விதி மனிதனைவிட்டு வைப்பதில்லை என்பதுபோல எத்தனை பேரின் துயரைத் துடைத்த சிந்துஜாவே இன்று அவசர சிகிச்சைப் பிரிவில் அனு மதிக்கப்பட்டிருந்தாள். விபத் துக்குள்ளானவள் சிந்துஜா என்பதை அறிந்ததும் புழு வாகத் துடித்தான் சங்கர்.

சிந்துவின் இரத்தம் 'ஓ' வகையைச் சேர்ந்தது. சங்கர தும் அதே வகையைத்தான் அந்த ஒற்றுமையைக்கூடப் பரி சோதித்துக் கூறியவள் சிந் துஜா தான்.

அந்த நினைவு வரவே அந்த இடம்நோக்கி விரைந்தான். இரத்தம் பரிமாறப்பட்டது. உண்மையன்பு நிலவுகையில் உணர்வுகள்கூட செயல்படும் என்பது போல அந்த நிகழ்ச்சி அமைந்திருந்தது அவனுக்கு.

சிந்துவைப் பார்ப்பதற்காக சங்கர் காலையும் மாலையும் ஆஸ் பத்திரிக்கே ஏறி இறங்கினுன். ஓய்வாக இருக்கவேண்டும் என் பதற்காகஅவளைச் சங்கர் தூர இருந்து பார்த்துவிட்டுச் சென்றுவிடுவான்.

அன்று அவள் கண்விழித்த போது அவள் முன்னே சங்கர் சிலையாக நின்றுன். அதே கண் கள். அதே சிரிப்பு மீண்டும் அங்கே நெஞ்சங்கள் அலை மோதின.

(யாவும் கற்பனை)

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ரதோற்சவ சிறப்பு மலர்


"உலகனைத்தும் காத்தருளும் துர்க்கை அம்பாள் பதம் போற்றி நலமனைத்தும் பெற்றுய்வோம் நன்மையலால் வேறில்லை"

**வசீகரன்ஸ்ரோர்ஸ்**

தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.



தேர் ஏறி திரு உலாவரும்
துர்க்கா தேவி தாயே!

**கொடுப்பாரும் எடுப்பாரும்
இல்லாப் புண்ணிய பூமியாக
எங்கள் நாடு மலர
அருள் பாலிப்பாய்!**

வாடிக்கையாளர்களே உங்களுக்குத் தேவையான

- ★ மின்சார உபகரணங்கள்
- ★ விவசாய கிருமிநாசினிகள்
- ★ -SLON எஸ்லோன் பைப் வகைகள்
- ★ தரமான பெயின்ற் வகைகள்
- ★ விவசாய விதைகள்

முதலியவற்றிற்கு நாடுங்கள்!

**"அபிராமி"**

பலாலி வீதி, திருநெல்வேலி.


## தேர்வரும்
## தெய்வக்காட்சி

சீரெலாம்
நிறைந்த தான
தெல்லியம்
பதியை மேவி
ஆருயிர்க்
கிரங்கும் அன்னை
அற்புதம்
நிகழ்த்தும் அன்னை
பேர் பல
இயம்பி நாளும்
பேரன் பால்
வணங்கு வோர்க்குப்
பார்மிசை
இடர்கள் நீக்கிப்
பயனெலாம்
நல்கும் அன்னை

★

அன்னைதேர்
மீதிவர்ந்தே
அருள் செய்யும்
காட்சி காணபோர்
இன்னல்கள்
நீங்கப்பெற்றே
இன்பமே
எய்துவார்கள்
நன்மையே
எண்ணும் சிந்தை
நன்மையே
விளைக்கும் வார்த்தை
நன்மையே
பயக்கும் செய்கை
நல்குவாள்
அன்னைதானே

- ம. பார்வதிநாதசிவம்


"விடுதலைக்கு அருள் தருக
துர்க்கா தேவியே"

V

**கருடா கிறீம்
ஹவுஸ்**

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.



அருள் புரிந்த துர்க்கை அம்பாள் தேரில் பவனி வருவதை மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறார்கள்.

**குணம் கிறீம் ஹவுஸ்
ஸ்தாபனத்தார்**

அம்மையின் அருள் வேண்டிவரும் அடியார்களுக்கு தரமான ஐஸ்கிறீம் வகைகளும், குளிர்பானங்களும் துர்க்காபுரத்தில் அமைந்திருக்கும் எமது வியாபார ஸ்தாபனத்தில்அருந்தி மகிழ அன்புடன்வரவேற்கிறார்கள்.

V

**குணம் கிறீம்
ஹவுஸ்**

துர்க்காபுரம், தெல்லிப்பழை.



"எங்கள் தமிழ் இனத்தார்
எய்தும் இடர் நீங்கித்
தங்கும் விடுதலையில்
என்றும் மகிழ்ச்சி பெறத்
துர்க்கை பதம் நாளும்
தொழுதிடல் நன்றுமே"

**தெல்லிப்பழை பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,**

தெல்லிப்பழை.

தொலைபேசி: 343

# தேரில் எழுந்தருளும் தேவி அருள்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)
யினால் ''துர்க்கை'' என்னும் நாமத்தை பெற்றவள் கொலு வீற்றிருப்பதற்கு உருவாக்கப் பட்ட புதிய ரதம் சிற்ப அம் சங்களுடனும், கலை நுணுக் கங்களுடன் பூரண பொலி வுடனும் காட்சி தருவனவாக அமைந்துள்ளது;

திராவிட மரபுக்கேற்ப உரு வாக்கப்பட்ட இச் சித்திரத் தேரானது சுமார் 18 மாத காலத்துக்குள் துர்க்கையின் அருளால் திருநெல்வேலி கலா கேசரி ஆறுமுகம் தம்பித்துரை யினாலும் அவரது குழுவின ராலும் உருவாக்கப்பட்ட தாகும்.

1978ம் ஆண்டு 4ம் திகதி ஒன்பதாவது மாதம் வெள் ளோட்டம் விடப்பட்ட இப் புதிய சித்திரத் தேர் இன்று காலை 9 மணிக்கு எட்டாவது தடவையாக ஆலய திருவீதி யில் மூல மந்திரத்தை ஒலித் திடும் மணியோசை குலுங்கிட ஈழத்தின் பலபாகங்களிலும் இருந்து திரண்டு வந்த பக்தர் கள் குழாம் புடைசூழ ஆண் பெண் என்கிற பேதமின்றி சித்திரத் தேரின் வடம் பற்றி ''அரோகரா'' கோஷம் எழுப்பி கண்களில் பக்திப் பரவசமான ஆனந்தக் கண் ணீர் மல்கிட ஒன்றுகூடி இழுக்கும்போது ரதமானது ஆடி, அசைந்து செல்வதைப் பார்ப்பதற்கு ஒரு கோடி கண்கள் வேண்டும். வாழ்த்து வதற்கு ஒரு கோடி வாய்கள் வேண்டும். தேரை இழுப் பதற்கு ஒரு கோடி கரங்கள் வேண்டும். சிரம் தாழ்த்தி வணங்குவதற்கு ஒரு கோடி தலைகள் வேண்டும். இவை எல்லாம் துர்க்கையின் அருளே அன்றி வேறொன்றுமில்லை.

## தேரேறி அருள் செய்யும் தெல்லியூர்த் துர்க்கை

தாயே ஈஸ்வரியே துணைதரும்
வடிவாம்பிகையே
நீயே எம்குறைகள்
தீர்த்திடுவாயம்மா
தீயோர் எமைத் தொடர்வது
போதும் துர்க்கையே-என
சேயேஉன்காதில்உரைப்பதை
— நீ அறியாயோ:

★

திருமகள் கலைமகள் மலைமகள்
என்னும் வடிவிலே
செல்வமும் கல்வியும்
கலங்காவீரமும் அளிப்பவளே
நின்னை நாடியவர்மனதில்
புகுந்து புத்தியை
— உணர்த்தியவளே
எம்மைத் தீண்டுபவரையும்
சித்திரத் தேரேறி — சினம்
கொண்டு தீர்த்திடுவாய்.

செல்வி சூரியகலா
கைலாசபிள்ளை

''துதிசெய அருள் செயும் துர்க்கையை''
வணங்கிடுவோம்'

V

சுன்னுகம்
பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
சுன்னுகம்.

தொலைபேசி:- 303

''ஈடு இணையில்லாத துர்க்காதேவி
உம் அடிபணிகின்றோம்''

V

லிங்கம் கூல்பார்
கிறீம் ஹவுஸ்

52, மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

''இல்லறமும் நல்லறமும் பல்கிப் பெருகுதற்கும்
எல்லா வகைச் சிறப்பும் எய்தி மகிழ்வதற்கும்
அன்னை துர்க்கைபாதம் அல்லால் துணை உண்டோ!''

திருமணசேவையில் இன்றைய முன்னேடிகள்!

சமுத்திரா மல்ரி சேவிசஸ் கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பழை.

புதிய சேவை: 14-9-86 தொடக்கம், ஆரம்ப வகுப்பில் இருந்து 6-ந் தரம் வரையும் ஸ்போக்கின் இங்லிஸ் ஆகிய வகுப்புக்கள் ஆரம்பிக்கவிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியத்தருகிறோம்.

விபரங்களுக்கு தொடர்புகொள்ளுங்கள்:
எமது பன்முகப்படுத்தபபட்ட சேவைகள்;

1. திருமணசேவை.
2. காணிகள், வீடுகள் வாங்குதலும் விற்பனைசெய்தலும்.
3. கட்டிட நிர்மாண ஒப்பந்தங்கள்.
4. கட்டிட பட வரைதல்.
5. கட்டிடங்களை புதுப்பித்தலும், பழுதுபார்தலும்.
6. மின்சார உபகரணங்கள் பொருத்துதல்.
7. பாவித்த மின்சார உபகரணங்கள், தளபாடங்கள் வாங்குதலும் விற்பனைசெய்தலும்.
8. கடவுச்சீட்டுக்கள் எடுத்தல், (Passport) புதுப்பித்தல், பிணை நிற்றல் (Bonding) விசா, ரிக்கற்றிங்.
9. தட்டச்சு சேவைகள்.
10. மொழிபெயர்ப்புச் சேவைகள்.
11. சட்ட ஆலோசனைகள்.
12. பொருள்கள் இறக்குமதி செய்தல் (Imports).
13. பொருள்கள் ஏற்றுமதி செய்தல் (Exports).
14. பிறநாடுகளில் இருந்து இறக்குமதியான பொருள்களை அப்புறப் படுத்துதல் (Clearing of goods from Customs).
15. யாழ் குடாநாடடில் பொதிச்சேவை நடத்துதல்.
16. பிறப்புச்சாட்சிப்பத்திரங்கள், உறுதிகள், மற்றும் அரசாங்க ஆவணங்கள் எடுப்பதற்கு உதவுதல்
17. யாழ் குடாநாட்டில் உற்பத்திசெய்யும் பொருட்களை சந்தைப் படுத்துதல்.
18. கணக்கு ஆய்வாளர் மூலம் கடை/ஸ்தாபனங்களின் கணக்குகள் (Accounts) எழுதுதல்.
19. புதிதாக பதிவுசெய்யயபடவேண்டிய வியாபார ஸ்தாபனங் களுக்கு பதிவுகள் (Business Registration) பெறறுக்கொடுத்தல்.
20. மற்றும் இதர சேவைகள்.

உங்கள் தேவை எதுவாக இருந்தாலும் எங்கள் சேவையை நாடுங்கள்
எமது கிளை நிறுவனங்கள்;

1. முருகமூர்த்தி லேன், நெல்லியடி, கரவெட்டி.
2. K K. S வீதி, தெல்லிப்பழை.
3. கண்டி வீதி, சாவகச்சேரி.
4. காரைநகர் வீதி, மானிப்பாய்.
5. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
6. வங்களாவடி, வேலணை.

எமது தலைமை அலுவலகம்:

சமுத்திரா மல்ரி சேவிசஸ்

303, பலாலி றேட் - கோண்டாவில்.

## அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

கைதடி சரஸ்வதி சனசமூக நிலைய கலை இலக்கிய நண்பர்கள் கழகத்தினர் ஆதரவில் மாத்தளை இராஜலிங்கத்தின் "புதுயுக நாயகிகள்" கவிதைத் தொகுதி அறிமுக விழா இன்று நடைபெறும்.

கலைவாணி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவிற்கு திரு என் கே. துரைசிங்கம் தலைமைதாங்குவார். [வா]

## இவ்வாரம்

(4ம் பக்கத்தொடர்ச்சி)

போகலாம். திரை மறைவிலும் சதிகள் உருவாகும். சிலருக்கு நூதன ரோகமும் தென்படும். தொழில் துறையிலும் அதிக கவனம் செலுத்தவும் சகோதர மனஸ்தாபமும் தோன்றலாம்.

### கடகம்

மனதில் மகிழ்ச்சி துள்ளும். வளமான வாழ்வும் கிட்டும். தொழில் சுகமும் உண்டு. கடந்த கால நினைவுகளால் இன்பக் கடலில் மூழ்குவீர்கள். வணிகர்களாயின் வியாபார விருத்திக்குமிடமுண்டு.

### சிங்கம்

எக் காரியத்திலும் அதிக கவனம் செலுத்தவும். உதவி செய்யப் போய் உபத்திரவத்தையணைத்துக் கொள்ளுவீர்கள். வாழ்க்கையிலும் நிம்மதி பிறக்கும் அவசர நடவடிக்கைகளைத் தவிர்க்கவும். புதிய தொழில்களை இன்று பிற் போடவும்.

### கன்னி

தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவும் கிட்டும். எடுத்த முயற்சியைச் சிறப்பாகச் சாதிப்பீர்கள். நீண்ட நாள் கடன் நிவர்த்தியாகும். குடும்ப வாழ்விலும் நிம்மதி பிறக்கும். வாழ்க்கையும் வளமாகும்.

### துலாம்

பறந்து வந்த செய்தி ஒன்று உங்களைப் பரவசத்தில் ஆழ்த்தும். புதுப் பிரயாணங்களும் உண்டு. பொருள் லாபமுமுண்டு தரும சிந்தை மேலோங்கி நிற்கும். இல்லச் சிறப்புமுண்டு.

### விருச்சிகம்

பொதுப்பணி நாட்டமுண்டு. வருவாயில் திருப்தி காணும் சகோதர சந்தோஷமுமுண்டு. பிற பொருள் வரவுமுண்டு. இரு தொழில் புரியவும் முயற்சியுண்டு.

### தனுசு

விரக்தி நிலை தோன்றும் கடமையிலும் மந்த நிலை காணும் பிரிவுத் துயர் வாட்டும். புதிய முதலீடுகளைப் பின் போடவும் எவ்விடயத்திலும் அதிக கவனத் செலுத்தவும்

### மகரம்

பெண்கள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளவும். எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம் பொருள் நழுவக் கூடும்

### கும்பம்

காதலர் வாழ்வு கற்கண்டு போல் இனிக்கும் சிலருக்கு எதிர்பார்த்த செய்தி கிட்டும். ஆசிரியர்களுக்கு நன்னாள் வெளியிடத்துத் தொடர்பும் கிடைக்கும். தொழில் விருத்தியுமுண்டு.

### மீனம்

எதிரிகள் சூழ்வர். நம்பிக்கை மோசடி நடக்கும். கொடுக்கல் வாங்கல் பிணக்கும் தோன்றும். வாகனச் சாரதிகள் அவதானம் வேண்டும் குடும்பத்திலும் பொறுமையுடன் நடந்து கொள்ளவும்.

திருமலை
**க.வே.ரவீந்திரன்**

## திருட்டு அம்பலம்

வேலணை, சனி

மண்கும்பான் அரசாங்க நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் கிளைக்காரியாலயத்தில் வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான 'கிரேசர்' சுற்களும் மற்றும் பெறுமதி மிக்க பல பொருட்களும் விற்பனைநோக்கத்திற்காக சிலரால் இரவு வேளையில் ஏற்றிச்செல்லபபட்டு வந்தன இச்சம்பவத்தையடுத்து இளைஞர்கோஷ்டியினர்திருட்டு தனமானமுறையில் பொருட்களை ஏற்றுவதற்காக பாவிக்கப்பட்டுவந்த உழவு யந்திரத்தையும் மற்றும் நபர்களையும் பிடித்து விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

## இன்று ரதோற்சவம்

யாழ்ப்பாணம். ஞாயிறு

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய மகோற்சவம் இன்று காலை 4 மணிக்கு உஷத்கால பூஜையுடன் ஆரம்பமாகும்

காலை 7 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி தேரில் ஆரோகணிந்து பவனி வரும் நிகழ்ச்சி இடம்பெறும். [வா]

## பேராதனை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து சகல பொறியியல் பீட மாணவர்களும் நேற்று மாலை 3மணிக்கு முன்னர் பல்கலைக் கழகத்தைவிட்டு வெளியேறுமாறு கேட்கப்பட்டிருந்தனர்.

மேலும் அடுத்த மாதம் நடைபெறவிருந்த பொறியியல்பீட பரீட்சைகளும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (சி)

## முத்துமாரி அம்பாள் மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுழிபுரம் பணிப்புலம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது. [இ]

## குருநாகலில் வேகமாக நோய் பரவுகிறது

குருநாகல், சனி

குருநாகல் பகுதியில் வயிற்றோட்ட நோய் வேகமாகப் பரவிவருகிறது. தற்போது மட்டும் 71 பேர் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை குருநாகல் பகுதியில் ஒரு சில உணவு சாலைகளும் ஐஸ்கிறீம் விற்பனை நிலையங்களும் அரசின் உத்தரவின்பேரில் மூடப்பட்டுள்ளன. [எ]

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம். ஞாயிறு

யாழ் மாவட்ட கலாசார பேரவையின் ஆதரவில் நடைபெற்றுவரும் ஐந்துநாள் இசை விழாவின் மூன்றுவதுநாள கிய உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு. அன்ரன் அல்பிறட் தலைமையில் நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

செல்வி நந்தினி சோமசுந்தரத்தின் வீணையுடன் ஆரம்பமாகும் நிகழ்ச்சியில் திரு. எம் வர்ணகுலசிங்கம் திரு ஏ கே. கருணாகரன் ஆகியோரின் இன்னிவசக் கச்சேரிகளும் இடம் பெறவுள்ளன. [வா]


## எமது இன்றைய புதியவெளியீடுகள்

[I] ★ அருண்குமார் ★ காஞ்சனா நடித்த "நாட்டிய பைரவி" (V. G. P)

(II) ★ முத்துராமன் ★ K. R. விஜயா நடித்த "நத்தையில் முத்து" (V. G. P.)

(III) ★ சந்திரபாபு ★ K.R. விஜயா ★ சாவித்திரி நடித்த "தட்டுங்கள் திறக்கப்படும்"

IV) RICHARD BURTON இன் THE 5th OFFENSIVE

**வீடியோ பிரசாத்,**

இல: 424, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

[A1275]



## 'எம்மக்களின் எதிர்காலத்தை நோக்கி'

யாழ். மறுமலர்ச்சிக் கழகமும், மாணவர் முன்னணியும் இணைந்து நடாத்தும்

## பொருட்காட்சி

(அழைப்பு)

எம்மக்களின் எதிர்கால இலட்சியமாகிய சுதந்திர சமதர்ம தமிழீழத்தின் கடந்தகால வரலாற்றினையும் எதிர்கால சமூக அரசியற் பொருளாதார கொள்கைத் திட்டங்களையும் செயற் திட்டங்களையும் மாதிரிகளையும் உள்ளடக்கிய இப்பொருட்காட்சி காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை இடப்பெறும்.

எம்மக்கள் ஒவ்வொருவரும் இப்பொருட்காட்சியில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இடம்: யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி.

காலம்: 12-9-86 முதல் 20-9-86 வரை.

நேரம்: காலை 8 மணி — மாலை 8 மணி.

C 4641


# வடக்கில் வேறு நிர்வாகம் நடக்கிறது மஹரகம எம். பி.

கொழும்பு, சனி

"தமிழீழம் கோருவோர் யாழ் நகரில் தபால் முத்திரை அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள் தமிழீழ வாதிகள் வடக்கில் வரி அறவிடுகிறார்கள் எல். ரீ ரீ ஈ இலட்சினை பொறிக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் அங்கு ஓடுகின்றன. நீதி விசாரணையைக் கூட அவர்களே நடத்துகிறார்கள்."

இவ்வாறுபாராளுமன்றத்தின் சபை ஒத்திவைப்பு வேளையில் மஹரகம எம். பி திரு. தினேஷ் குணவர்த்தன நேற்று கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், வடக்கில் அரச நிர்வாகம் இருப்பதாக அரசு கூறுகிறது. ஆனால் அங்கு நடப்பதோ வேறு நிர்வாகம். திரு. அமிர்தலிங்கம் போன்றோர் கூட ஏற்க முடியாத நிர்வாகம் அங்கு நடக்கிறது

இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய 2 இராணுவவீரர்கள் தமிழீழ தொலைககாட்சிக்குப் பேட்டியளித்ததாகக் கூறப்படுகிறது என்று கூறிய மகரகம எம் பி மன்னாரில் பாலம் உடைக்கப்பட்டுள்ளதாகவும் படையினர் ஆகாய மார்க்கமாகவே அங்கு செல்ல முடிகிறதென்றும் கூறினார்.

இதற்கு பதிலளித்துப்பேசிய தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி அரச நிர்வாகம் அங்கு தொடர்ந்தும் இருப்பதாகக் கூறினார். [எ]

## நான்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

"தமிழ் ஈழ ராணுவத்தினர் அருள்நேசன் [சண்] தலைமையில் கடற்படையினருடனை நேரடி மோதலில் ஈடுபட்டிருந்தனர். இச் சம்பவத்தில் கடற்படையினர் நால்வர் கொல்லப்பட்டனர், பலர் படுகாயமடைந்தனர்,

இம் மோதலின் போது எமது தரப்பில் இரு போராளிகள் வீரமரணமடைந்தனர் மூவர் காயங்களுடன் கரை சேர்ந்தனர்.

"இதே மாவட்டத்தில் கடந்த 5ம் திகதி காலை ஒட்டுசுட்டான் சந்தியிலுள்ள நாவலடி காவல் அரண் மீது எமது போராளிகள் தாக்குதல் நடத்தியதில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் எமது தப்ரப்பில்எதுவித இழப்புமிலலை." [மா]

## மட்டு-மஞ்சந்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சூட்டுச் சத்தமும் கேட்டவண்ணமிருக்கிறது

இது இவ்வாறிருக்க படுவான் கரையில் முகாமிட்டிருக்கும் முப்படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளுக்குமிடையே தொடர்ந்து நேரடிச் சமர் நடபெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## மறைந்திருந்து...

1 பக்கத் தொடர்ச்சி)

கில் சென்ற போராளிகளில் நால்வர் கடலில் குதித்து தப்பிச் சென்றதாகவும் ஒருவர் படகுடன் கரை சேர்ந்ததாகவும் கூறப்படுகிறது. [எ]


**லிடோ**

16 ம் திகதி முதல் தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30

பிரபு. நளினி நடித்த,

**நியாயம்**

(கலர், புதிய வெளியீடு)

**வெலிங்டன்**

10-30 2-30, 6-30

தியாகராஜன் சில்க் சுமிதா ஜெய்சங்கர்—பானுசந்தர் நடித்த

**நீங்கள் கேட்டவை**

(கலர்) புதிய பிரதி


## கிராமசேவை அலுவலர் நியமனம்

பண்டத்தரிப்பு சனி

சங்கானைவடக்குகிராமசேவை அலுவலகராக மாதகலைச் சேர்ந்த திரு இ துரைரசா நியமனம் பெற்றுள்ளார்.

சங்கானை கிழக்கு கிராம சேவை அலுவலராக திரு. எஸ் இராசபாலன் நியமனம் பெற்றுள்ளார். நெடுந்தீவு கிராமசேவை அலுவலராக திரு அ கந்தையா நியமனம் பெற்றுள்ளார். (ச)

## பருத்தித்துறை மத்திய பிரஜைகள் குழு வேண்டுகோள்

பருத்தித்தித்துறை, சனி

பருத்தித்துறைத் தொகுதியில் வன்செயல்களால் பாதிக்கப்பட்டோர் தத்தமது பகுதி பிரஜைகள் குழுக்களுடன் தொடர்புகொள்ளுமாறு பருத்தித்துறை மத்திய பிரஜைகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கிளை பிரஜைகள் குழுக்களால் பெறப்படும் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டோர் பற்றிய விபரப்பட்டியல்கள் அகதிகள் புனர்வாழ்வுச்சபையினரிடம் கையளிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலையில் பலர் கைது

[நமது நிருபர்]

திருமலை கடல்முக வீதி தொடக்கம் மடத்தடிவரை நேற்று அதிகாலை திடீரென சுற்றிவளைத்த ஆயுதப்படையினர் சுமார் 1000 பேரை கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

அந்த சமயம் செல்வநாயகபுரத்தில் உள்ள தமிழ் பாடசாலையிலும் ஆயுதப்படையினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்

கடந்த சில நாட்களாக திருமலை மாவட்டத்தில் ஆயுதப்படை திடீ தேடுதல் வேட்டை நடத்தி 5. 6 வயதிற்கு மேற்பட்டோரைக் கைதுசெய்து வருகின்றனர்.

இந்த நடவடிக்கையால் மக்கள் மத்தியில் மேலும் பதற்றநிலை உருவாகியுள்ளது; [மா]

## கடற்படை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இச்சம்பவத்தைத் தொடர்ந்து காரைநகரிலிருந்து பின்னர் ஏவிவிடப்பட்ட 'ஷெல்'கள் இரண்டு பொன்னுச்சி கடையடியில் வந்து விழுந்தபோது ஒரு வயோதிபருக்கு பலத்த காயம் ஏற்பட்டது

இச்சம்பவம் தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

'நேற்றுக் காலை ஊர்காவற்துறையில் கடற்படையினருக்கும் மக்கள் விடுதலைப் படையினருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது

'இரு விசைப் படகுகளில் வந்த கடற்படையினர் ஊர்காவற்துறையில் இறங்க முற்பட்டபோது மக்கள் விடுதலைப் படைவீரர்கள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர். இம்மோதலில் கடற்படையினர் சிலர் காயமடைந்ததுடன் கடற்படையினர் பின்வாங்கி சென்றனர்.'

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

ஞாயிற்றுக்கிழமை 14-9-86

### அடுத்தகட்டப் பேச்சுக்கள்

# போராளிகள் கலந்துகொண்டால் புதுடில்லியில் நடைபெறும்

(கொழும்பு நிருபர்)

இனப்பிரச்சினை தீர்வு காணப் பேச்சுக்கள் மீண்டும் எதிர்வரும் 25ம்திகதி ஆரம்பமாகும் என்றுதகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பேச்சுக்களில்போராளிகள் கலந்துகொண்டால் மட்டுமே பேச்சுவார்த்தை புதுடில்லியில் நடைபெறும் என்றும் அல்லது கொழும்பிலேயே நடைபெறும் என்றும் அறியப்படுகிறது.

நடைபெறப்போகும் மூன்றும் கட்டப்பேச்சுக்களில் இருதரப்பினராலும் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இறுதிமுடிவுகள் எடுக்கப்சப்பட்டதும்அவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக்கப்படும்.

இதேவேளை இந்தியவெளிவிவகாரச் செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் இலங்கைக்கான இந்திய தூதுவர் திரு. பேர்ணட் திலகரத்தினவுடன் அடுத்த கட்டப்பேச்சுக்கள் குறித்து இலங்கை அரசின் ஆலோசனைகள் குறித்து ஆராய்ந்துள்ளார். [ஏ]

## முல்லைத்தீவில் ஷெல் தாக்குதல்

(முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு பகுதியில் இராணுவத்தினர் அடிக்கடி ஷெல் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தாக்குதலினால் வீடுகளும் சில கட்டிடங்களும் சேதமடைந்துள்ளன அதிகமாக இரவு நேரத்திலேயே இராணுவத்தினர் இத்தாக்குதல்களை மேற்கொள்கிறார்கள்.

## நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம் ஞாயிறு

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நூற்றாண்டு விழா இன்று கொண்டாடப்படவுள்ளது.

இவ்விழாவிற்கு யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் பிரதம விருந்தினாகக் கலந்துகொள்வார், நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு.சு சிவநாயகமூர்த்தி சிறப்புவிருந்தினராக கலந்து கொள்வார்.

வித்தியாலய நூற்றாண்டு விழாவையொட்டி 'இந்து தீபம்' என்னும் மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

## படையினரின் நடவடிக்கைகளால் பல்லாயிரம் ஏக்கர் வயல்கள் அறுவடைசெய்யமுடியாத நிலை

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள படுவான்கரையில் ஆயுதப்படையினரின் நடவடிக்கையால் பல்லாயிரம் ஏக்கர் வயலில் அறுவடை செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது

மட்டக்களப்புக்குத் தேவையான அரிசி உணவு வகைகள் பெறுவதற்கு படுவான்கரைப்பகுதியில் விளையும் நெல்லே கைகொடுத்து உதவிவந்தது.

படுவான்கரைப்பகுதி வயலில் இப்பொழுது நெல் அறுவடை செய்யும காலமாகும். கடந்த மூன்று நாட்களாக படுவான்கரையில் முகாமிட்டுள்ள ஆயுதப்படையினரின் நடவடிக்கையால் விவசாயிகள தங்கள் வயல்களில் நெல் அறுவடை செயயமுடியாது அகதிகளாகி காடுகளில் தஞ்சம்புகுந்து தவியாய் தவிப்பதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. [மா]

## இராணுவ வாகன விபத்தில் ஐந்து பேர் பலி

அநுராதபுரம், சனி

இராணுவவாகனம் ஒன்று விபத்துகுள்ளானதில் ஐந்து இராணுவத்தினர் பலியானார்கள. பலர் படுகாயமடைந்தனர்.

நேற்று மாலை அநுராதபுரம் மருதம்கடவெல என்னும் இடத்தில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் வேகமாக வந்த இராணுவவாகனம் பாதையிலிருந்து விலகி பலயார் தூரம் சென்று குடைசாய்ந்தது.

காயமடைந்தவர்களிற் பலர் தற்போது அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [எ-இ]

## தமிழ்ப்பணியை பாராட்டி 'மகாவித்துவான்' பட்டம்

[மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை மட்டக்களப்பு முதுபெரும் தமிழ் அறிஞரான வித்துவான் எவ். எச்ஸ். ஸி. நடராசாவின் தமிழ்ப்பணியைப் பாராட்டி 'மகாவித்துவான்' பட்டம் சூட்டி பொன்னாடைபோர்த்தி கௌரவித்தது.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து தலைமையில் நேற்றுக் காலை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது.

மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலய அதிபர் திரு க. கணபதிப்பிள்ளை தலைமையில் மட்டக்களப்பு மக்கள் சார்பில் இப்பட்டம் சூட்டப்பட்டது

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, மகாவித்துவான் சி. கணேசையர் ஆகியோருக்குப் பின்னர் தமிழ் உலகம் திரு நடராசாவுக்கு மகாவித்துவான் பட்டம் சூட்டி கௌரவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மகாவித்துவான் நடராசா யாழ் மாவட்டத்திலுள்ள காரைநகரை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு புளியந்தீவில் வசிப்பிடமாகவும் - புகுந்த இடமாகவும் கொண்டு கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக மட்டக்களப்பில் தமிழ்ப் பணிபுரிந்து வருகிறார். மா]

## புலிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாகனத்தில் பல இராணுவத்தினருடன் முதலாம் குறுக்குத் தெரு சந்தியில் வந்து நின்று. அவ்வழியாக வெளியே வர முயற்சித்த பொழுது இரு பகுதிகளிலும் சென்றியில் நின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் ஆர். பி ஜி. மற்றும் நவீன ரக துபபாக்கிகள் கொண்டு கடும் தாக்குதலை மேற்கொண்டதில் கவச வாகனம் பலத்த சேதத்துக்குள்ளாகியதாகவும், அதிலிருநத சில இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகளின் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

கவச வாகனத்திலிருந்து தப்பியோடிய இராணுவத்தினர் அருகிலுள்ள கட்டடங்களிலும் வீடுகளிலும் ஒளித்திருந்து துப்பாக்கிபிரயோகம் செய்ததாகவும், அவர்களை எதிர்த்து புலிகளும் எதிர்தாக்குதல் நடத்தியதாகவும் அந்த செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. சேதமடைந்த கவச வாகனத்தை மீட்டுச் செல்ல மேலும் பல இராணுவத்தினர் முகாமிலிருந்துவந்ததாகவும் அவர்கள் மீதும் தாங்கள் தாக்குதல் நடத்தியதாகவும் வாகனததை மீட்கும் பணியைக் கைவிட்டு அங்குள்ள கட்டடங்களுள் இராணுவத்தினர் பதுங்கிக் கொண்டதாகவும் கவச வாகனம் அந்த இடத்திலேயே கைவிடப்பட்டுவளதாகவும், அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவனியாவிலிருந்து புறப்பட்ட அரிசி 'வான்' கடத்தப்பட்டு பெண் சுட்டுக்கொலை

வவனியா சனி,

வவனியாவிலிருந்து 80 மூடை அரிசியுடன் கொழும்பிற்கு சென்ற வான் ஒன்று கடத்தப்பட்டதுடன் அதில் பயணம் செய்த பெண் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை வவனியாவிலிருந்து கொழும்பு நோக்கி 80 மூடை அரிசியுடன் சென்ற இந்த வானை மூன்று முறிப்பு பிள்ளையார் கோவிலடியில் வைத்து சாரமும் சேட்டும் அணிந்த இரு இளைஞர்கள் தடுத்து நிறுத்தி சாரதியையும் அருகிருந்த பெண்ணையும் வானிலிருந்து இறக்கினார்களாம்.

பின்னர் இறக்கி விடப்பட்ட லீலாவதி [வயது 30] என்ற அந்தப் பெண்ணைச் சுட்டுக் கொலை செய்ததுடன் வானையும் 80 மூடைஅரிசியுடன்கடத்திச் சென்றனர்

வவனியா மன்னார் வீதியில் அமைந்துள்ள தமிழ் வர்த்தகருக்குச் சொந்தமான இந்த அரிசி மூடைகளின் பெறுமதி சுமார் 40,000 ரூபாவாகும். (சி)

## கடற்றொழிலாளர் மீது 'ஷெல்' தாக்குதல்

(வல்வெட்டித்துறை நிருபர்)

பருத்தித்துறையில் நேற்று நடந்த இராணுவத்தினரின் கவச வாகன சேத சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியினை வட்டமிட்டுப் பறந்து திரிந்த ஹெலிக்கொப்டர் திருப்பி வல்வைகடலோரமாகப் பறந்து வந்த பொழுது வல்வைக்கடலில் கட்டுமரத்தில் நின்று மீன்பிடித்த கடற்றொழிலாளர் மீது தாக்குதல் நடத்தியது.

எதிர்பாராத இத்திடீர் தாக்குதலால் நிலை குலைந்த கடற்றொழிலாளர் கடலில் குதித்து சுழியோடி நீந்தி வந்து கரைசேர்ந்தனர். கைவிடப்பட்ட கட்டுமரம் நின்ற பகுதியில் பல தடவை துப்பாக்கிப்பிரயோகம் செய்த 'ஹெலி' பின் பறந்து சென்றது.

### படையினர்

## துப்பாக்கிப்பிரயோகத்தில் சிங்கள இளைஞர் பலி

வவனியா, சனி

வவனியா சிங்களப் பிரிவு காட்டுமாங்குளம் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் சிங்கள இளைஞர் ஒருவரைச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

காட்டுமாங்குளம் பகுதியில் போராளிகளைத் தேடிச்சென்ற ராணுவம் அப்பகுதியில் கசிப்பு வடிப்பதில் ஈடுபட்டிருந்த குழுவினரை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததிலேயே மேற்படி நபர் பலியானார்.

இச்சம்பவத்தின் போது துப்பாக்கிப்பிரயோகத்திற்கு பலியானவர் வீரணர (18 வயது) என்று அடையாளம் காணப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் கொலை எனத்தீர்ப்பளித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மரண விசாரணை அதிகாரி ஆர். வி. வில்வராசா பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார் (சி)

## இரு வாரங்களாக தீவுப்பகுதி இருளில்

வேலணை, சனி

தீவுப்பகுதியைச் சேர்ந்த புங்குடுதீவு, ஊர்காவற்றுறை வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு கரம்பன், சுருவில் ஆகிய பகுதிகளுக்கான இரவு மின்சார விநியோகம் கடந்த இரு வாரங்களாக தடைப்பட்டுள்ளது

மேற்படி பகுதிகளுக்கு பகலில் மட்டும் மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றது.

இதற்குக் காரணம் தீவுப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்குப் பொன்னாலையில் நிறுவப்பட்டுள்ள இரண்டு மின் மாற்றிகளில் ஒன்று அண்மையில் பழுதடைந்து விட்டது என்று இலங்கை மின்சாரசபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### பாக்கியலக்குமி நடராசா

பாக்கியலக்குமி நடராசா காலமாகிவிட்டார். அன்னார் இளைப்பாறிய சிறுப்பரும், [காசாளர்] முருகன் எலக்ரிக்கல் ஸ்ரோர்ஸ் A.நடராசா அவர்களின் அன்பு மனைவியும், செல்வநாயகி, விமலநாயகி, மகேஸ்வரன் [லைடன் காமன்ஸ்], பவளநாயகி, சாந்தநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், S. தருமலிங்கம், M. சண்முகநாதன், சந்திரா (ஆசிரியை, முத்துத்தம்பி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரது ஈமைக்கிரிகைகள் 15- 9- 86 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் 2, வெங்கடேஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவிலடி) இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரிகைக்காக கோம்பயன் மணல் மயானத்துககு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகேஸ்வரன்

(C 4642)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.